இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-27 | 13-11-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-269





S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-1212)


## சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்கள்

# சிறிலங்கா அரசால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழரை சர்வதேசம் பேச்சுக்கு அழைப்பதேன்?

## புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் கேள்வி

(நமது நிருபர்)



**இலங்கை இனப்பிரச்சினைக்காக சிறிலங்கா தரப்புக்கு சர்வதேச சமூகம் அளித்த அனைத்து வாய்ப்புக்களையுமே அடி முட்டாள்தனமாக நிராகரித்துவிட்ட நிலையில் தொடர்ந்தும் சிங்களத் தரப்பின் மீது நம்பிக்கை வைத்து தமிழர் தரப்பைப் பேச்சு மேசைக்கு சர்வதேச சமூகம் ஏன் அழைக்க வேண்டும்? என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

புலிகளின் குரலில் ஒலிபரப்பான அரசியல் அரங்கம் நிகழ்ச்சியில் க.வே. பாலகுமாரன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

ஜெகான் பெரேரா என்ற கட்டுரையாளர் தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களைப் புலிகள் கோருவதைச் சர்வதேச சமூகம் எப்படி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாளன்று பிறக்கும் குழந்தைகளுக்கு சேமிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் நாளை முன்னிட்டு 26 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிமுதல் 27 ஆம் திகதி நள்ளிரவிற்கிடையில் பிறக்கும் குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகையினை விட ஒரு மடங்கு அதிகமான தொகையினை அவர்களது பெயரில் கிராமிய அபிவிருத்தி வங்கி வைப்பிலிடவுள்ளது.

இதற்குரிய படிவங்களை மாவட்ட வைத்தியசாலையில் அல்லது அருகிலுள்ள கிராமிய அபிவிருத்திவங்கிகளில் பெற்று நவம்பர் 28 ஆம் திகதி பகல் 10.00 மணிக்கு முன்பாகப் பூரணப்படுத்தி வங்கியில் கையளிக்குமாறு கிராமிய அபிவிருத்தி வங்கி பொது மேலாளர் செ.தவக்குமார் தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி வங்கியினரால் மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக மாவீரர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் அன்புவின் 12ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு



(அலுவலக செய்தியாளர்)

லெப். கேணல் அன்புவின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் குமுழமுனையில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

1992 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் பூநகரி இராணுவ முகாமைத் தாக்கியழித்த தவளை நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த முன்னாள் முல்லை மணலாறு மாவட்டத் தளபதியான லெப். கேணல் அன்பு / தாடியின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு குமுழமுனைச் சந்தியில் அவரது நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

மிக நீண்ட காலமாக முல்லை. மணலாறு மாவட்டத்தின் தளபதியாகவிருந்து அப்பகுதி மக்கள் மத்தியில் விடுதலை உணர்வையூட்டி வந்ததோடு அன்று சமூக மட்டத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு படையணிகளுக்கிடையில் கலை இலக்கியப்போட்டி



(நமது நிருபர்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கிடையிலான கலை இலக்கியப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் இடம் பெறு கின்றன.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் கல் லூரியில் போராளி அகனழகன் தலைமையில் இப் போட்டிகள் ஆரம்பமாகின.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோரில் உழவியந்திரம் சிக்கியது; இரு முஸ்லிம்கள் பலி; நான்கு பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்திலுள்ள கயூவத்தையில் நேற்று அதிகாலை உழவு இயந்திரமொன்று கிளைமோர் குண்டில் சிக்கியதில் இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். நான்கு பேர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் மர வியாபாரிகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு உழவு இயந்திரங்களில் காட்டில் மரங்களை வெட்டிக் கொண்டு தமது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கையில்; அதில் வந்த ஒரு உழவு இயந்திரமே கிளைமோர் குண்டொன்றில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசமானது கயூவத்தை சிறிலங்கா இராணுவ முகாமிற்கும் கிரிமிச்சை குளத்திற்கும் இடைப்பட்ட இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இராணுவத்தை தாக்கிவிட்டு ஆயுதங்கள் இனந்தெரியாதோரால் அபகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் நேற்று 1.30 மணியளவில் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இவர்களிடமிருந்த ஏ.கே 47 ரக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் பறித்துச் செல்லப் பட்டுள்ளது.

வவுனியா நகரிலிருந்து ஆறு கிலோ மீற்றர் வடமேற்கில் உள்ள கணேசபுரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்;கணேசபுரம் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினருக்கு உணவு எடுத்துக் கொண்டு வந்துகொண்டிருந்த இவர்கள் மீது முச்சக்கரவண்டி மற்றும் உந்துருளிகளில் வந்த ஒன்பது பேர் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் வெட்டியும் படுகாயப்படுத்தப்பட்ட குமாரதுங்க என்ற சிப்பாய் அனுராதபுரம் வைத்தியசாலையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார வேலியில் சிக்கி மன்னாரில் பொலிஸ் பலி

(மன்னார்)

மன்னாரில் மின்சார வேலியில் சிக்கி பொலிசார் ஒருவர் பலியானார். மன்னார் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக்காலை 8.10 மணியளவில் பொலிஸ் காவல் நிலையத்தில் அமைக்கப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சூறாவளி தாக்கும் அபாயம்

(திருமலை)

சூறாவளி தாக்கும் முன்னெச்சரிக்கை திருகோண மலைக்கு விடுக்கப் பட்டுள்ளதால் அதற்கான மக்கள் காப்பு நடவடிக்கைகள் தொடர்பாக திருமலை அரசியல்துறையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்ட சம்பூர் அரசியல் துறையின் நடுவப்பணிமனையில் நடைபெற்ற இச்சந்திப்பில் அடுத்துவரும் வாரங்களில் திருகோணமலை மாவட்டத்தில் சூறாவளி வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்று வானிலை அவதானிப்பு மையத்தினர் விடுத்த எச்சரிக்கைத் தகவலையடுத்து மக்களின் பாதுகாப்பு ஏற்பாடு தொடர்பாக இச் சந்திப்பு நடைபெற்றுள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

## வரிவிளம்பரம்

**Web Site Designing**

உங்களது வியாபார நிறுவனங்களை சர்வதேச ரீதியில் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்திடவும்.வியாபார நிறுவனத்தின் பெயரில்

**இணையத்தளங்களை பதிவு செய்து உருவாக்கிடவும்**

***தொடர்புகட்கு:***

வின்நெற் கணனி பயிற்சி நிலையம்,
டிப்போ வீதி,கிளிநொச்சி

(சி.13074)

## தவறிவிட்டது

11.11.2005 அன்று கிளிநொச்சிக்கும் விசுவமடுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பரஞ்சோதி கண்ணன் என்பவரின் அடையாளஅட்டை (743611101-V) அடங்கிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேருந்துப்பகுதி கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்கவும். (6922)

## விற்பனைக்கு

270-0045 என்ற உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-சி.நாகரட்ணம், புதுமுறிப்பு. ஆச்சிரமம் றோட் (6426)


# வட்டக்கச்சிப் பிரதேசமக்களின் பொதுப் பிரச்சினைகள் ஆராய்வு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறையின் ஒழுங்குபடுத்தலில் வட்டக்கச்சிப் பிரதேச மக்களினது பொதுப்பிரச்சினைகள் ஆராயும் நிகழ்வு கடந்தவியாழன் காலை 10.00 மணிக்கு வட்டக்கச்சி அரசியல் துறைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்புகளில் மக்கள் தமது பிரச்சினைகளையும், நிறுவனங்களில் பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் நீண்டநேரஆராய்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன்,கிளி.மாவட்டஅரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி, கிளி மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் நாகேஸ் கிளி.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப்பொறுப்பாளர் செந்தில் மனிதவள பாதுகாப்பு பொறுப்பாளர் அக்காச்சிகிளி.மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர்அறி வன்பன் கிளி.மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழில் இன் பன், பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் வினோ,பல்துறைசார்ந்தஉத் தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (12)


## அறிவித்தல்

*கிளிநொச்சி கச்சேரி மாவட்ட திட்டமிடல் செயலக பாவனைக்காக வான் அல்லது பிக்கப் ஒன்று வாடகைக்கு அமர்த்துவதற்கு கேள்வி கோரப்படுகின்றது. விபரம் மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் பார்வையிடலாம். முடிவுத்திகதி. 18.11.2005.*

தி.இராசநாயகம்,
அரசாங்கஅதிபர்,
கிளிநொச்சிமாவட்டம்.

(சி.13334)

## புதியவாகனங்கள் விற்பனைக்கு

புத்தம்புதிய கார்,வான் போன்ற வாகனங்கள் லீசிங்முறையில் விற்பனைக்கு உள்ளன.

தொடர்புகளுக்கு:-
தொலைபேசி: 0773077099, 0114921159. (சி.1322)


## கண்ணீரில் கரைந்த நான்காம் ஆண்டு நினைவுநாள்



மண்மகிழ:-26-12-1935 கண்நெகிழ:-13-11-2001

**அமரர்**

## திரு. இராசலிங்கம் செல்லத்துரை

*கைபிடித்த நாள்முதலாய் கணமேனும் பிரியாமல்*
*நிழல் போல வந்தவளை நிமிடத்தில் மறந்து*
*நிர்க்கதியாய் தவிக்கவிட்டு நிம்மதியாய் மறைந்தீரே*
*உன் உதிரத்தில் வந்துதித்த முமமணிகள் கதறி அழ*
*உன் கடமை முடிந்ததென்று கண்மூடிக்கொண்டீரே*
*நெஞ்சம் குமுறி ஏழ நிம்மதிகள் கலைந்தோட*
*கண்ணீர் பெருகிவரக் கதறி அழுதாலும்*
*கண்ணன் கழல் அடியில் களிப்புடன் வாழ வேண்டுகிறோம்.*

நிரந்தரமுகவரி:-
"செல்வபதி"
மல்லாகம்.

(6921)

குடும்பத்தினர்:-
தற்காலிகமுகவரி,
இல.64,கணேசபுரம்,
கிளிநொச்சி.

# சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதனால் அடிப்படை உரிமைகள் பேணப்படுகின்றது

## –மக்கள் சந்திப்பில் காவல்துறையினர்



சட்டமும் ஒழுங்கும் சரியாக பேணப்படுவதன் மூலம் சமூகத்தில் இருக்கும் ஒவ்வொரு தனிநபரும் தனது உரிமைகளைப் பெற்று அனுபவிக்கும் சூழல் உருவாக்கப்படுகின்றதென தென்னியங்குளத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் துணுக்காய் காவல்பணிமனைப் பொறுப்பாளர் நா.வதனகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை தென்னியங்குளம் அரசினர் பாடசாலையில் இச்சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் பொது மக்களுக்கு அவர் பல அறிவுரைகளையும் வழங்கினார் இதில் தமிழீழ தேசியக்கொடியை மல்லாவி பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் புனிதன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து சமூக மட்டத்தில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் நலிவுற்றோர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக காவல் துறையினரும் மக்களும் கலந்துரையாடினர்.

இப்படியான பிரச்சினைகளை இல்லாதொழிப்பதற்காக காவல்துறையினருடன் இணைந்து செயற்படப்போவதாக நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

# கி.அபி.வங்கிசேமிப்பு கணக்கில் வைப்பிலிட்டவர்களுக்கு பரிசில்



(அலுவலகசெய்தியாளர்)

சேமிப்பு வாரத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட்டு குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் ஒக்ரோபர் 30 ஆம் திகதி சர்வதேச சேமிப்பு நாளை முன்னிட்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி வரையான காலத்திற்கு சேமிப்பு வாரமாக பிரகடனப்படுத்தியிருந்தது.

இக்காலத்தில் வங்கியின் முதலீட்டு சேமிப்பு வைப்பில் இடுபவர்களுக்கு குலுக்கல் முறையில் சிறப்பு பரிசில்கள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கமைவாக மேற்படி குலுக்கல் நிகழ்வு கடந்த 02.11.2005 அன்று மு.பகல் 11.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் வங்கியின் பணிப்பாளர் ப.சுஜன் மற்றும் வங்கி மேலாளர்கள், பணியாளர்கள், வழமைதாரர்கள் முன்னிலையில் த.பொ. மே.நிறுவனநடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

இதில் கிளைகள் மட்டத்தில் குலுக்கலில் கிளிநொச்சிக்கிளையில் ந.யாமினி, இல.33 கனகபுரம் , கிளிநொச்சி, புதுக்குடியிருப்புக்கிளையில் நா.செல்வகுமாரி உடையார் கட்டு வடக்கு, உடையார்கட்டு, முள்ளியவளைக்கிளையில் பா.புஸ்பராஜ், வற்றாப்பளை, முள்ளியவளை, பூநகரிக்கிளையில் க.விஜயராணி, பூநகரி, மன்னார்க்கிளையில் வ.யோகராசா, தேனுடையான், திருக்கேதீஸ்வரம், வவுனியாக்கிளையில் ஜெ.விஜயரஞ்சினிதேவி, கனகராயன்குளம் மல்லாவிக்கிளையில் ச.கனகசபாபதி, 30 வீட்டுத்திட்டம், விநாயகபுரம். ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் முதலீட்டு சேமிப்புக்கணக்கில் தேசிய மட்டக்குலுக்கலில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் புதுக்குடியிருப்புக் கிளையை சேர்ந்த சோ.நாகராசா, (புதுக்குடியிருப்பு) என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொதுமேலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 19.11.2005 அன்று மாலை மூன்று மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(சோ)

## துயர் பகிர்கின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 | 10 |
| - | - |
| 08 | 11 |
| - | - |
| 1925 | 2005 |

**அமரர்**

## இராமுப்பிள்ளை நல்லதம்பி

*திருகோணமலை மூதூர் கட்டைபறிச்சானை சொந்த இடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை நல்லதம்பி அவர்கள் இறைபதம் எய்தியதை கேள்வியுற்று மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம் அவர்களின் குடும்பத்தார்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.*

போராளிகள்,
தொண்டர்கள்,
பணியாளர்கள்.

(சி.13335)

தகவல்:-
தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை,
கறுக்காய்குளம்,
மன்னார்.

# புயலில் சிக்கி ரஷ்ய விமானம் மலையில் மோதி 10 பேர் பலி

*(காபூல்)*

***ஆப்கானிஸ்தானில் மறு சீரமைப்புப் பணிக்கான பொருட்களை எடுத்துச் சென்ற ரஷ்ய விமானம் ஒன்று புயலில் சிக்கித்தத்தளித்து மலையில் மோதி வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த விமானி, சிப்பந்திகள், ஊழியர்கள் உட்பட பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர்.***

ஆப்கானிஸ்தானில் மறு சீரமைப்புப் பணிகளுக்காகப் பல்வேறு நாடுகளில் இருந்து உதவிப் பொருட்கள் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ரஷ்யாவில் இருந்து ஒரு சரக்கு விமானம் புறப்பட்டுச் சென்றது. அந்தச் சரக்கு விமானத்தில் விமானி, சிப்பந்திகள், ஊழியர்கள் உட்பட 10 பேர் இருந்தனர்.

அந்த விமானம் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் அருகே சென்று கொண்டிருந்த போது பயங்கரப் புயல் வீசியது. பலத்த மழையும் பெய்தது. இதனால் விமானம் தனது கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாகப் பறந்தது.

சிறிது நேரத்தில் அந்த விமானம் காபூல் அருகே உள்ள மலையில் மோதி வெடித்துச் சிதறியது.

இதில் அந்த விமானத்தில் இருந்த 10 பேரும் பலியாகிவிட்டனர். தகவல் கிடைத்ததும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதி முழுவதும் பனி மூட்டாக உள்ளதால் மீட்புப் பணியில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. இதுவரை ஆறு உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# டாக்காவில் பலத்த பாதுகாப்புடன் "சார்க்" உச்சி மாநாடு நேற்று ஆரம்பம்

(டாக்கா)

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான "சார்க்" அமைப்பின் இரண்டு நாள் உச்சி மாநாடு நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பலத்த பாதுகாப்புடன் தொடங்கியது.

இந்த அமைப்பின் தலைவரான பங்காளதேஷ் பிரதமர் பேகம் காலிதாசியா நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இவர் தமது தலைமை உரையில் தீவிரவாதத்தை ஒழிக்க சார்க் நாடுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்றும்போது:-

"சார்க்" அமைப்பைச் சேர்ந்த ஒரு நாட்டுக்கெதிராக தீவிரவாத இயக்கங்கள் செயற்பட இதில் அங்கம் வகிக்கும் மற்றொரு நாடு அனுமதிக்கக் கூடாது என்றும் மன்மோகன்சிங் கேட்டுக்கொண்டார்.

# இரு மாணவிகளுக்கிடையேயான வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்தது



இங்கிலாந்தில் பாடசாலை ஒன்றில் இரு மாணவிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறு கத்திக்குத்தில் முடிந்தது. சக மாணவியை கத்தியால் குத்திய 14வயதுச் சிறுமி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே போல இங்கிலாந்திலும் பள்ளிக்கூட மாணவ- மாணவிகளிடையே வன் முறை கலாச்சாரமும் ஒழுங்கீனமும் அதிகரித்து வருகிறது. ஒழுங்கீனத்தில் ஈடுபடும் மாணவ- மாணவிகளுக்கு தண்டனை வழங்கவும் பெற்றோருக்கு அபராதம் விதிக்கவும் ஆசிரியர்களுக்கு அனுமதி அளிக்க சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனாலும் மாணவ மாணவிகளுக்கிடையே வன்முறை குறையவில்லை. காம்பர்லே சுர பகுதியிலுள்ள ஒரு பாடசாலை வகுப்பறையில் மாணவிகளுக்கு இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. அங்குள்ள சிற்றுண்டிச்சாலைக்கு சென்றபோது இந்தத் தகராறு மோதலாக மாறியது.

அப்போது திடீரென்று 14 வயதுச் சிறுமி ஒருத்தி சிற்றுண்டிச்சாலையில் இருந்த் கத்தியை எடுத்து வந்து தன்னுடன் தகராறு செய்த நாதசியாயக்மேன் என்ற மாணவியை சரமாரியாக குத்தினார். நாதசியாவின் முகத்தில் பல இடங்களில் கத்திக் குத்து விழுந்தது. கத்திக் குத்துக்குட்பட்ட அந்த 15 வயது மாணவி உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். அங்கு அவளுக்கு சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.அபாய கட்டத்தை அவள் தாண்டி விட்டாள்.

கத்தியால் குத்திய 14வயதுச் சிறுமியைப் பொலிசார் கைது செய்தனர். பிணையில் விடுபட்டு அவள் மீது பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# சிட்னியில் குவிந்த கிறிஸ்மஸ்தாத்தாக்கள்



அடுத்த மாதம் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடுவதையொட்டி கிறிஸ்மஸ் தாத்தாக்களுக்கு வேலை வந்து விட்டது. பயிற்சிப்பள்ளியில் பயிற்சி முடித்த கிறிஸ்மஸ் தாத்தாக்கள் சிலர் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலாவுக்கென புறப்பட்டு விட்டனர்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு விமானத்தில் வந்து இறங்கிய அந்த கிறிஸ்மஸ் தாத்தாக்கள் வரவேற்க வந்தவர்களை பார்த்து கை அசைத்த காட்சி. பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

# கொபி அனான் தவறு செய்துவிட்டார்
## ஐ.நா. ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி அறிக்கை



(நியூயோர்க்)

"ஈராக் எண்ணைக்கு உணவுத்திட்டத்தில் கொபி அனான் தவறு செய்து விட்டார்" என்று ஐ.நா. ஒழுங்கு நடவடிக்கை கமிட்டி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஈராக் நாட்டில் 1996 ஆம் ஆண்டு சதாம்ஹுசைன் ஆட்சிக் காலத்தில் எண்ணைக்கு உணவுத்திட்டம் நிறை வேற்றப்பட்டது. இந்தத் திட்டம் ஐக்கியநாட்டு சபையின் மேற்பார்வையில் நிறைவேற்றப்பட்டது. உலக அளவில் பல நிறுவனங்களுக்கு ஐ.நா. சபை அதிகாரிகள் பரிந்துரையின் பேரில் இந்தத் திட்டத்தின்படி உணவுக்குப் பதிலாக எண்ணை வழங்கப்பட்டது.

இதில் ஊழல் நடந்திருப்பது ஐக்கியநாட்டுச் சபை முன்னாள் அதிகாரி பால் வோல்கர் அறிக்கை மூலம் கடந்த மாதம் வெளிப்பட்டிருக்கிறது.

இந்த ஊழல்பற்றி ஐக்கியநாட்டுச் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவும் விசாரித்தது. இந்தத் திட்டத்தில் தவறு செய்த ஐ.நா. அதிகாரிகள் யார்? யார்? என்று இக்குழு ஐ.நா. உயர் அதிகாரிகளுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:

இந்தத் திட்டத்தில் இடைத்தரகராக செயற்பட்ட ஜோசப் ஸ்டீபன்ஸ் தவறு செய்திருக்கிறார். அவரது விருப்பப்படி ஐக்கிய நாட்டுச் சபை அதிகாரிகளும், ஊழியர்களும் செயற்பட்டு இருக்கிறார்கள். ஆனால் போதிய அளவில் ஆதாரங்கள் இல்லை. அவர்களை எல்லாம் டிஸ்மிஸ் செய்ய வேண்டும்.

ஸ்டீபன்ஸ் தனது வாக்குமூலத்தில், "உயர் அதிகாரிகளின் விருப்பப்படி செயற்பட்டேன்" என்று கூறியிருக்கிறார்.

பெனான் செவான் என்பவர் மட்டும் ரூ. 150 இலட்சத்திற்கும் அதிகமாக ஆதாயம் பெற்று இருக்கிறார். இந்தத் திட்டத்தில் ஐ.நா.வின் வரம்பு கள் மீறப்பட்டு இருக்கின்றன. பெனான் செவான் பரிந்துரையின் பேரில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த லாயர்டு நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஈராக் எண்ணை திட்டத்தில் ஊழல் நடந்ததற்கு ஐக்கிய நாட்டுச் சபை செயலாளர் கொபி அனான் பொறுப்பு ஏற்க வேண்டும். வோல்கர் அறிக்கை ஒரு உண்மை கண்டறியும் வழியே தவிர, நீதித்துறையின் அமைப்பு அல்ல." இவ்வாறு அறிக்கையில் கூறப் பட்டிருக்கிறது.

# ஜோர்தான் தற்கொலை படைத்தாக்குதல் ஈராக்கியர்கள் உட்பட 120 பேர் கைது

(அம்மான்)

ஜோர்டானில் கடந்த வியாழக்கிழமை மூன்று இடங்களில் நடந்த தற்கொலைப் படைத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஈராக்கியர்கள் உட்பட 120 பேரை ஜோர்தானிய பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ஜோர்தானியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஜோர்டான் தலைநகர் அம்மானிலுள்ள மூன்று நட்சத்திர விடுதிகளில் கடந்த வியாழக்கிழமை தற்கொலைப்படை தாக்குதல்கள் நடந்தன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்த இந்த விடுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 60இற்கும் மேற்பட்டோர் பலி யாயினர். 300இற்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு அல்-ஹைதாத் தீவிரவாத அமைப்பினர் பொறுப் பேற்றிருந்ததும் தெரிந்ததே.

# உலகின் பெரிய விமானம்



உலகிலேயே மிகப்பெரிய விமானம் ஐரோப்பாவின் "ஏர்பஸ்380" விமானமாகும் இது சிங்கப்பூருக்கு தனது முதல் பயணத்தை தொடங்கியிருக்கிறது. சிங்கப்பூரின் சாஞ்சி விமான நிலையத்தில் அந்த "ஏர்பஸ்" 380 விமானம் தரை இறங்கியுள்ள காட்சியே இது. ஆசியாவில் சந்தையைப்பிடிப்பதில் "ஏப்பஸ்" நிறுவனத்துக்கும் அமெரிக்கா வின் போயிங் நிறுவனத்துக்கும் போட்டி கடுமையாகவுள்ளது.

பிலிப்பைன்சின் மணிலாவில் அமெரிக்காவைக் கண்டித்துப் பொது மக்கள் போராட்டம் நடத்தினர்.



# அமெரிக்க இராணுவ இரகசியம் விற்பனை
## கைதான இந்.பொறியியலாளருக்கு பிணை மறுப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவ இரகசியம் விற்கப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்ட இந்திய பொறியியலாளரை பிணையில் விட அமெரிக்க நீதிமன்று மறுத்துவிட்டது. இந்தியாவில் பிறந்தவர் நோஷிர் கோவாடியா. பொறியியலாளரான இவர் அமெரிக்காவில் குடியுரிமைபெற்று அங்கேயே வசித்து வருகிறார்.

அமெரிக்க இராணுவ இரகசியங்களை விற்றதாகக் கடந்த மாதம் 26 ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் மீது ஆறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆறு குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டால், இவருக்கு குறைந்தபட்சம் பத்து வருடம் கடுங்காவல் சிறைத் தண்டனையும், ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம். ஆனால் தான் குற்றமற்றவன், தனக்கும் இராணுவ இரகசியங்கள் விற்பனைக்கும் சம்பந்தம் இல்லை என்று அவர் நீதிமன்றில் முறையிட்டுள்ளார்.

பொறியியலாளர் நோஷிர் கோவாடியா சார்பில் அவரது வக்கீல் கிறிஸ் டோட், மாவட்ட நீதிபதி ஹெலென் கில்மோர் முன் ஆஜராகி அவரை பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என்று வாதாடினார்.

ஆனால் நீதிபதி, கோவாடியாவை பிணையில் விட மறுத்து விட்டார்.

# சனாதிபதித்தேர்தலை புறக்கணிக்குமாறு வவுனியா மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(செட்டிகுளம்)

***எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை வவுனியா வாழ்மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து அம்சக்கோரிக்கையினை முன்வைத்து இந்தத் தேர்தலை புறக்கணிக்குமாறு கோரப்பட்டுள்ளது.சனாதிபதித் தேர்தல் முடிவுகள் எமது விடுதலைக்கு வழிகாட்டாது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் எவரும் எமது தாயகம் தழுவிய பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வைத் தரமாட்டார்கள்.

சனாதிபதித் தேர்தல் மக்களாட்சிக்கோ, மக்களின் நலனுக்கோ அல்ல. ஆட்சிக்கும் அதிகார வெறித்தனத்திற்கும் உரியது.

மக்கள் நலன் எவையும் மேம்பாடடையமாட்டாது. தாயகம், சுயநிர்ணயம், தன்னாட்சி என்பன உரியவாறு வெளிப்படுத்தப் படவில்லை.

ஆகையால் தமிழீழ தேசம் ஒட்டு மொத்தமாக இந்த சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து எமது அபிலாசைகளுக்கு எதிரான தேர்தல் என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி எமது ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டினையும் வெளிப்படுத்துவோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் தேர்தலினை புறக்கணிக்குமாறு வெளியிடப்பட்டுள்ள முதலாவது அறிக்கை இது என்பது குறிப்பிடத்தக்கது. (21,10)

## நீர் நிறைந்துள்ள பாரிய கிடங்கினை மூடக் கோரிக்கை



(மல்லாவி)

துணுக்காய் பிரதேச யோகபுரம் மத்தியில் துணுக்காய் பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் பாரிய கிடங்கொன்று வெட்டப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்து வரும் கன மழைநீர் நிறைந்துள்ள இக்கிடங்கினால் இவ்விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள வீதியால் செல்வோர் தவறி விழும் அபாயமுள்ளது. அண்மையில் ஒரு வயோதிபப் பெண் விழுந்து அயலவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். எனவே இவ் ஆபத்தை விளைவிக்கும் இப் பாரிய கிடங்கினை மூடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.. (24)

## மாணவரமைப்பினர் மாணவர் சந்திப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கிளி/மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில்இன்பனுடான சந்திப்பு ஒன்று கடந்த வியாழனன்று மதியம் 12.30 மணியளவில் பாடசாலையின் சிரேஷ்ட மாணவத்தலைவன் கோணேஸ்கரன் தலைமையில் பாடசாலையியில் இடம் பெற்றது. தரம் 11,12 வகுப்புக்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு இடம் பெற்ற இந்நிகழ்வில் பாடசாலையில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகள், மாணவர்களின் ஒழுக்கம் பற்றியும், முக்கியமாக தமிழீழ மாவீரர் தினத்தை மிகவும் சிறப்பாக கொண்டாடவும் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு பாடசாலையின் ஆசிரியர் இன்மை, குறைபாடுகள் பற்றியும் மாணவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.மற்றும் ஏனைய பாடசாலைகளிலும் இக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (12)

## கேணல் பானு-சித்த மருத்துவர்கள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு சித்த மருத்துவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.மட்டக்களப்பு கரடியனாறு தேனகத்தில் கடந்த வியாழன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சித்த மருத்துவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

சித்த மருத்துவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து அவர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதனை மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதனைத் தொடர்ந்து நியாப் 2 திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 மையக் கிராமங்களில் வாழ்வாதார செயற்திட்டங்கள் எனும் கருப்பொருளில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மையக் கிராமங்களின் மக்கள் நிலை தொடர்பாகவும் கிராமங்களின் தேவைகள் சரியான முறையில் இனம் காணப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திப் பணிகள் தொடர்வது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன

## சேதமடைந்த மதகினால் போக்குவரத்துக்குச் சிரமம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மல்லாவி நகர் பகுதியின் வைத்தியசாலை வீதியில் இருந்து கிழக்கு பக்கம் செல்லும் எம். எஸ். எவ் வீதியில் மூன்று நீரோடி மதகுகளில் இரண்டு மதகுகள் திருத்தப்பட்டநிலையிலும் ஒரு நீரோடி மதகு திருத்தப்படாத நிலையில் இருந்து வருவதால் மக்கள் இவ் வீதியூடாக பயணிக்க சிரமங்களைச்சந்தித்து வருகின்றனர். இதைக் கவனத்தில் கொண்ட பிரதேச அரசியல்துறையினர் இவ் வீதி ஊடாகமக்கள் பயணிக்க வீதியில் அமைந்த மதகின் கிடங்கினை மூட உதவி செய்துள்ளனர்.

## கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசங்களில் கட்டாக்காலி கால் நடைகளினால் பெரும்போக நெற்செய்கை பாதிப்படைந்து வருகின்றது. கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த அறிவித்தல் கொடுத்திருந்த போதும் பண்ணையாளர்களாலும் பராமரிப்பாளர்களாலும் கால்நடைகள் கட்டுப்படுத்த தவறியமையை உணர்ந்த துணுக்காய் பிரதேச அரசியல் துறைனரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கமநல சேவையினர் இணைந்து மல்லாவி நகர்ப் பகுதியில் கடந்த வியாழனிலி ருந்து கட்டாக்காலி மாடுகளைப் பிடித்துபட்டியிட்டும் கட்டியும் வருகின்றனர். அத்துடன் குற்றப் பணமாக 100 ரூபாவும் பிடிகூலி 50 ரூபாவும் அறவிடுகின்றனர். (24)

## விழிப்புணர்வுக் கருத்தூட்டல்

மழைக்கால தொற்று நோய் தொடர்பான கருத்தூட்டல் தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்றது. கடந்த புதன்கிழமை காலை 8.35 மணிக்கு கிளி/ இராமநாதபுரம் மேற்குப்பாடசாலையில் முன்னூறிற்கு மேற்பட்ட மாணவர்களிற்கும் இருபது ஆசிரியர்களிற்கும் காலை 10.00 மணிக்கு கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க உத்தியோகத்தர், ஊழியர்கள், நாற்பத்தியிரண்டு பேருக்கும், காலை 11.30 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஐம்பத்தியிரண்டு பேருக்கும் ,மதியம் 1.30 மணிக்கு சேரன் தொழிலக ஊழியர்கள், பணியாளர்கள் நாற்பத்தைந்து பேருக்கும் மழைக்கால நீர் உணவுத்தொற்று நோயியல் காவிகளால் பரவும் டெங்குக்காய்ச்சல், மலேரியா தொடர்பான கருத்தூட்டல் வழங்கப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன்தினம் மதியம் 2.00 மணிக்கு போரூட் வன்னிப்பிராந்திய அலுவலகத்தில் 41 உத்தியோகத்தர்களிற்கு டெங்குக்காய்ச்சல் நோயிலிருந்து வருமுன் காத்தல், நுளம்புக்கட்டுப்பாடு உள்ளடங்கலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் நோய்க்காவிகளாகிய நுளம்பு உற்பத்தியாகும் இடங்கள் அவதானிக்கப்பட்டு அழிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

## நேப் தி[illegible]த்தில் வழங்கப்படும் நிதிக்கு எவ்[illegible]டத்திலும் வீடமைக்கலாம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு "நேப்" திட்டத்தின் மூலம் உலக வங்கியினால் வழங்கப்படும் ரூபா இரண்டரை இலட்சத்திற்கு அமைக்கப்படும் வீடுகளை முல்லை மாவட்டத்தில் எந்த இடத்திலும் நிர்மாணிக்க முடியும் என முல்லை. மாவட்ட "நேப்" திட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை முதற்கட்ட கொடுப்பனவு பெற்றுக் கொண்டவர்களில் 40 பேருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்[illegible]ளதாகவும் அவர் தெரிவித்தார். (20)

## தமிழீழ சுகாதார சேவையினரின் மழைக்கால விசேட நடமாடும் மருத்துவசேவை





(அலுவலக செய்தியாளர்)

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழீழ சுகாதார சேவையினரால் மழைக்கால விசேட நடமாடும் மருத்துவ சேவை ஆனையிறவு தட்டுவன் கொட்டிக் கிராமத்தில் நடை பெற்றுள்ளது.

வைத்தியவசதிகள் உட்பட்ட பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டிருக்கும் தட்டுவன்கொட்டி மீள்குடியேற்றக் கிராமத்தில் இந்த விசேட மருத்துவச்சேவை இடம் பெற்றுள்ளது.

தமிழீழ சுகாதார சேவையினரால் வரும் மழைக் காலத்தைக்கருத்தில் கொண்டும், தொற்று நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்று வதையும் நோக்காகக் கொண்டும் பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களில் இந்தச் சேவை நடாத்தப்படுகிறது.

இதன் படி முதலாவதாக கடந்த வாரம் கிளிநொச்சி சாந்தபுரத்தில் இந்தச் சேவை இடம்பெற்றது. இரண்டாவதாக தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் நடாத்தப்படுகிறது.

தட்டுவன்கொட்டிக் கிராமம் என்பது ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட பகுதியாகும். இந்தக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு மக்கள் தற்போது மீள்குடியேற்றப் பட்டு வருகின்றார்கள்.

இங்கு தற்போது 120 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின் சுமார் 15 மையில்களுக்கப்பால் உள்ள கிளிநொச்சி வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் கடந்த புதன் கிழமை மேற்படி கிராமத்துக்குச் சென்ற சுகாதார சேவையின் நடமாடும் சேவை அந்தப் பகுதியில் வசிக்கும் 200 இற்கும் அதிகமானவர்களுக்கு சிகிச்சைகளையும் வைத்திய ஆலோசனைகளையும் வழங்கியது.

இதன்படி வாய்ப்புற்று நோய், கர்ப்பிணித்தாய்மாருக்கான ஆலோசனைகள், பற்சிகிச்சைகள் உட்பட்ட பல்வேறு சேவைகளை மேற்கொண்டது. இதன்மூலம் இக்கிராம மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர்.

(லோ.தீ)

# சர்வதேசத்திடம் சலுகைகளைக் கேட்கவில்லை

# மறுக்கப்பட்ட உரிமைகளினைக் கேட்கின்றோம்

## தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உலகத்திலேயே மிக விலை மதிக்க முடியாத பெரும் செல்வம் கல்வியாகும். எமது தேசமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. காலம் காலமாக எத்தனையோ உலகப்புகழ் பெற்ற கல்விமான்களை உருவாக்கிய "இறும்பூது" எமது தேசத்திற்கு உண்டு. தமிழன் எவனுக்கும் தலைகுனிந்தவன் அல்ல என்று இறுமாப்புடன் சொல்வதற்கு கல்வியும் ஒரு காரணமாய் இருந்தது. எமது இனத்தின் உயிர் மூச்சு கல்வியாகும். ஆனால் சிங்களப் பேரினவாத அரசோ காலாதிகாலமாக எமது மாணவர்களின் கல்வி உரிமைகளினை மழுங்கடிக்கும் வகையில் சமத்துவமற்றதொரு அரசியல் நடைமுறையினைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது என தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1970 இற்கு முற்பட்ட காலப் பகுதிகளில் தனிச் சிங்களச்சட்டம் சிங்கள சிறி(ஸ்ரீ) நடைமுறை என மொழி ரீதியாக பாரபட்சங்களைக் காட்டி வந்த சிங்களத் தலைவர்கள் எதற்கும் கவரும் நிலையில் இருந்த தமிழ்த் தலைவர்களைத் தமது ஆசைவார்த்தைகளுக்குள் அகப்படச் செய்து அரசியல் நடத்திப் பிழைத்தனர். அடுத்துவந்த காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசாங்கங்கள் எமது இனத்தினை நலிவடையச் செய்யும் முதற்படியாகத் தமிழ் மாணவர்களின் கல்வியின் மீது கடுமையான போக்கினைக் கடைப்பிடிக்கத் தொடங்கின இதன் ஒரு அங்கமாகக் கல்வித் தரப்படுத்தல் முறை அறிமுகப் படுத்தப்பட்டது. அதுவரை காலமும தமிழ் மாணவர்களுக்கு வெகுவாகக் கிடைத்து வந்த பல்கலைக்கழக அனுமதிகள் இதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்டன சிங்கள அரசின் இருட்டடிப்பான இச்செயலினால் பாதிப்படைந்த பல தமிழ் இளைஞர், யுவதிகள் அதற்கெதிரான போராட்டங்களைத் தமது இனத்தின் எதிர்கால நன்மைக்காக முன்னெடுக்கத் தலைப்பட்டனர். இதன் இறுதிவடிவமே இன்றைய எமது இனவிடுதலைப் போராட்டமாகும்.

இது இவ்வாறிருக்க சிங்களப் பேரினவாதஅரசால் தமிழ் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வரலாற்றுப் பாடநூல்களில் திட்டமிட்ட வகையில் எமது இனத்தின் பூர்வீகத்தை எதிர்கால சந்ததியினர் அறியா வகையில் இருட்டடிப்புச் செய்துள்ளதுடன் வரலாற்றுக்கு புறம்பான பொய்யுரைகளினையும் பாடநூல்களிலே திணித்துள்ளது. சிங்களவரே இலங்கையின் பூர்வீகக்குடிகள் என்றும் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றும் வரலாறுகளினை மறைத்துக் கூறும் ஒரு பொறுப்பற்ற எழுத்தாண்மையை வரலாற்றுப் பாடநூல்களிலே அரங்கேற்றி வருகின்றது.

இக்காலநேரங்களுக்கெல்லாம் போட்டிப் போல உலகத்தினையே உலுப்பிச் சென்ற சுனாமிப் பேரலையானது எமது தேசத்தினையும் விட்டு வைக்கவில்லை இருபது வருடத்திற்கு மேற்பட்ட காலப்போரினால் அழிவுகளினைச் சந்தித்த எமது இனமானது இருபது நிமிடத்துக்குள் நிகழ்ந்த ஆழிப்பேரலையினால் அதற்குச் சமனான அழிவுகளை மீண்டும் சந்தித்தது இப்பேரனர்த்தத்தின் பின்னரான மனிதாபிமான நடவடிக்கைகளின் போது கூட சிங்கள அரசானது தனது பேரினவாத அரசியல் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது. ஆழிப்பேரலையால் சேதமடைந்த பாடசாலைகளோ, பாதிப்படைந்த மாணவர்களின் மீள் கல்வி நடவடிக்கைகளோ இன்னும் சீர்செய்யப்படவில்லை என்பது கவலைக்குரியதாகும்.

இந்த நிலையிலேதான் சர்வதேசத்திடம் நாம் கேட்கின்றோம் சலுகைகளை அல்ல எமக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் சிங்களப் பேரினவாத அரசால் மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது உரிமைகளினைக் கேட்கின்றோம் மானுடத்தின் உரிமை பற்றியும் மனிதாபிமானம் பற்றியும் பேசும் சர்வதேசத்திடம் இறுதியாக ஒரு தடவை எம்மினத்தினது உரிமை களினைக் கேட்கின்றோம் இதனை வலிந்து கேட்கவில்லை நாம் இன்று துணிந்து கேட்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கீ)

# யாழ். மாவட்டத்தில் படையினரின் பாதுகாப்பில் மகிந்தவுக்கு ஆதரவு திரட்டும் ஈ.பி.டி.பி யினர்

யாழ். மாவட்டத்தில் பலத்த இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புகளுடன் சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான சனாதிபதித்தேர்தல் பிரச்சாரப் பணிகளை ஈ.பி.டி.பி. யினர் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக பிரதமர் மகிந்தராஜபக்ஷ போட்டியிடுகிறார். இவருக்கு தமிழ்மக்கள் ஆதரவளிக்க வேண்டும் எனக்கோரி ஈ.பி.டி.பி யினரும் பிரச்சாரப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சிங்கள ஆட்சியாளர்களால் கடந்த காலங்களில் நிகழ்ந்த இன வன்முறைகளை மனதில் கொண்டு தமிழ் மக்கள் சனாதிபதித் தேர்தலை முற்று முழுதாக பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில் இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புகளுடன் யாழ் நகரம் , பருத்தித்துறை நகர், சாவகச்சேரி நகர், மானிப்பாய் நகர், இணுவில், மருதனார் மடம் எனப் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தேர்தல் பிரச்சாரப் பணிகளை பலவந்தமாக மேற்கொண்டு வருகின்றனர் இவ்வாறு இராணுவ பொலிஸ் அச்சுறுத்தல் மத்தியில் ஈ.பி.டி.பி. யினர் மேற்கொள்ளும் பலவந்தமான பிரச்சார நடவடிக்கைகளால் மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர். (33)

# யாழ். குடாக்கடலில் நச்சு நீர் ஆய்வு செய்ய போதிய வசதியில்லை

## கடற்றொழிலாளர் சம்மேளனத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடலில் ஏற்பட்டிருக்கின்ற ஒருவகையான நச்சு நீர் தொடர்பான ஆய்வினை மேற்கொள்வதற்கு வேண்டிய போதியளவு வசதி யாழ் கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்திடம் இல்லை என அதன் தலைவர் ரி.தவரட்ணம் தெரிவித்தார்.

யாழ். குடாக்கடலில் ஆழம் குறைந்த கடற்பரப்பில் நச்சு நீர் தேங்கியதாக உணரப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர் மீனவர்களால் அத்தகைய பிரச்சினைகள் காலம் காலமாக ஏற்படுகின்றபோது இது தொடர்பாக எந்த ஒரு தரப்பினாலும் ஆய்வு செய்து பிரச்சினையைக் கண்டறியாது இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

இதேவேளை இலங்கை கடற்றொழிலாளர் சம்மேளனமும் "நோறா" நிறுவனமும் இத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால், குடாநாட்டில் மீனவர்களுக்கு ஏற்படுகின்ற இது போன்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. யாழ் பல்கலைக்கழக மீன்பிடி அலகினால் இதுபோன்ற பிரச்சினைகளைக் கண்டறிந்து மீனவர்களுக்கு வழங்க முன்வரவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (கீ)

# தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை அறிய சர்வதேச கண்காணிப்பாளர் குழு யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் தொடர்பான யாழ். குடாநாட்டு மக்களின் நிலைப்பாடுகள் தொடர்பாக அறிந்துகொள்ளும் முகமாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர் குழு ஒன்று யாழ். குடாநாட்டிற்கு வருகை தந்துள்ளது.

"தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான சர்வதேச அமைப்பு" என்ற அமைப்பினைச் சேர்ந்த குழுவினரே இவ்வாறு யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதில் கனடாவைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளரான வீட்டோ கஸ்லி மற்றும் ஐக்கிய ராட்சியத்தைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளரான கதரின் மோர்ட் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.குடாநாட்டுக்கு வந்த இவர்கள் மாலை மூன்று மணியளவில் யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் வைத்து யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் "பவ்ரல்" அமைப்பின் பிரதிநிதிகளையும், மனித உரிமை அமைப்புகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இதில் முக்கியமாக முகமாலையில் அமையவுள்ள கொத்தணி வாக்கு நிலையங்களில் சுதந்திரமான வாக்கெடுப்பை நடத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள், அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் தொடர் குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச்சூடு என்பன தேர்தல் நிலைமைகளில் ஏற்படுத்தியுள்ள தாக்கம், எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்ற முடிவை தமிழ்மக்கள் எடுப்பதற்கான காரணம் என்பன குறித்து முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது. (33)

# அல்லைப்பிட்டி கரையில் சிறுமியின் சடலம் ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகம் அல்லைப்பிட்டி கடற்கரையில் சிறுமி ஒருவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.

கடந்த வியாழனன்று பிற்பகல் கரையொதுங்கிய இச்சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதி மீனவர்கள் கொடுத்த தகவல் ஒன்றை அடுத்தே மேற்படி கடற்கரைக்குச் சென்ற பொலிசார் சிறுமியின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் அழுகி உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (33)

# மகிந்த, ரணில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத்துக்கான எந்த முன்வைப்பும் இல்லை

தமிழின அழிப்பையே தமது அரசியல் தளமாகக் கொண்டுள்ள ரணிலும், மகிந்தவும் சிறிலங்கா தேசத்தின் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். இவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானத் தீர்வுக்கான எந்த முன்வைப்புக்களும் இல்லை. இவர்கள் இருவருமே தேர்தல் மேடைகளில் இனவாதப் பிரச்சாரத் தையே முழங்குகிறார்கள். கோயிற்குடியிருப்பு கிராமிய அபிவிருத்தி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும்,

நவீன படையை உருவாக்கி பலம்பெறுவதென்றும், இலங்கைத் தீவு முழுமைக்கும் சிங்களக் கொடியை பறக்க வைப்பதென்றும், கிழக்கிற்கென புறம்பான பொலிஸ் படையை அமைப்பதென்றும், அமெரிக்க, இந்தியப்படைகளை இறக்கி விடுதலைப்புலிகளுடன் மோதவிடுவதென்று ரணிலும், அவரது கட்சியும் கூப்பாடு போடுகின்றனர். ஊடகங்களில் ரணிலின் முகத்திரை கிழிகிறது.

மகிந்தவும் கூட்டுக்கட்சிகளும் அதிதீவிர தமிழின அழிப்புக் கருத்துக்களை விதைக்கின்றனர். இவர்கள் படுமோசமான சிங்கள பௌத்த பேரினவாதிகள் சமாதானத்திற்கான போரை நடத்தி தமிழினத்தை மோசமாகத் தாக்கியவர்கள்.

மிக நீண்ட கால தமிழின அழிப்புக்களை தமது வரலாறாகக் கொண்ட முன்னைய சிறிலங்காப் பிரதமர்கள் ஆகிய இவர்கள் இருவரது கரங்களும் குருதி தோய்ந்தவை என்பதை எவராலும் மறுக்க முடியாது. இவர்கள் இருவருமே விரும்பியிருந்தால் மெய்யான சமாதானத் தீர்வை எட்டியிருக்க முடியும். ஆனால் இவர்களே கேடுகெட்ட பேரினவாதிகளாக இருக்கும்போது சமாதானம் பற்றி இவர்கள் கூறுவது பொய்யைத் தவிர வேறு எதுவுமில்லை.

இவர்களை அண்டிப் பிழைக்கும் துரோகக் கும்பலொன்று வடக்கு கிழக்கில் சுயாட்சி என்றும், மத்தியில் கூட்டாட்சியென்றும் கூறியது. இப்போது அந்தக் கும்பல் மகிந்தவின் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு சந்தர்ப்பவாத அரசியல் பேசுகிறது. சனாதிபதித் தேர்தலால் தமிழ்பேசும் மக்களுக்கு கிடைக்கப்போகும் நன்மைதான் என்ன?

எதுவுமேயில்லை! தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம். சிங்கள தேசத்திற்கும் அனைத்துலகத்திற்கும் ஒரு சேதி சொல்வோம்.

பேரினவாத போர்க்கோலம் பூணும் சிறிலங்கா தேசத்து அரசியல் குறித்து எமக்கு அக்கறையில்லை. அதன்மூலம் எமக்கு விடிவுமில்லை. சனாதிபதித் தேர்தல் அவர்களுடன் போகட்டும். சிங்கள தேசம் சனாதிபதித் தேர்தலை எம்மீது திணிக்க நாம் அனுமதிக்கமாட்டோம். (37)

# யாழ். பஸ்நிலைய உணவகமொன்றில் வேகாத உணவு விற்பனை

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திற்கு அருகாமையாகவுள்ள உணவகத்தில் வேகாத உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதியன்று இரவு 8.00 மணிக்கு குறிப்பிட்ட உணவகத்திற்கு சென்ற இருவர் இரண்டு கோழிக்கொத்து ரொட்டியும் இரண்டு சோடாவும் கேட்ட பொழுது வேகாத நிலையிலிருந்த கோழி இறைச்சியுடனான கொத்து ரொட்டி வழங்கப்பட்டதாகவும் அதனை உணவக உரிமையாளருக்கு சுட்டிக்காட்டப்பட்ட பொழுதிலும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில் மேற்படி வழங்கிய உணவினை உட்கொள்ளாது அதற்கான பணத்தை வழங்கி விட்டு உணவகத்தைவிட்டு வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கு உகந்த வகையில் உணவினை வழங்குவதை விடுத்து பணத்தையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் உணவகம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ள. (சோ)

# தமது பலவீனங்களை வெளிப்படுத்தும் சனாதிபதி வேட்பாளர்கள்

வேலவன்



சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களிடையே பலமான போட்டி நிகழ்வதன் காரணமாக இத்தேர்தலில் யார் வெற்றி பெறுவார்? என்ற ஊகத்தை அரசியல் ஆய்வாளர்களால் வெளியிட முடியாத நிலையே காணப்படுகிறது.

கருத்துக் கணிப்பீடுகள் என்ற முறையில் வெளியிடப்படும் முடிவுகள் உண்மையானவை தானா? என்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ள நிலையிலும் இம்முறை அலை எதுவும் வீசாதநிலையிலும் ஊகங்களை மேற்கொள்ள முடியாதவாறு ஆய்வாளர்கள் உள்ளனர்.

அத்துடன் இத்தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளும் வேட்பாளர்களும் கட்சிக்குள்ளேயே பலவீன முள்ளவர்களாக உள்ளமையும் வெளிப்பட்டிருக்கின்றது.

மகிந்தராஜபக்ஷவைப் பொறுத்தவரை கட்சியின் தலைமைத்துவத்தில் ஐம்பது ஆண்டுகாலமாக இருந்துவந்த ஒரு குடும்பத்தின் செல்வாக்கிற்கு எதிராகப் போராட வேண்டிய நிலையுள்ளது. அதற்காக அவர் கையில் எடுத்துக்கொண்டது கட்சி ஐம்பது வருடங்களுக்கு முன் கொள்கையாகக்கொண்டிருந்த தீவிர இனவாதத்தையாகும். அதாவது வெளிப்படையான இனவாதத்தையாகும். அவர் சிறுபான்மை இனமக்களின் வாக்குகளை எதிர்பாராதவராக முழுக்க முழுக்க சிங்கள மக்களின் வாக்குகளை எதிர்பார்த்து தேர்தலில் போட்டியிடுகின்றார். அதற்கேற்ப கூட்டையும் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் வெளியிட்டிருக்கிறார். அவர் சமாதானம் தொடர்பாகவும் பேசிக்கொண்டாலும், அவரின் பேச்சை சமாதானத்திற்குரியதாக சிங்கள மக்களில் கூட பெரும்பான்மையோர் நம்பவில்லை. அதாவது உண்மையிலேயே சமாதானம் ஏற்படவேண்டும் என நம்புவோர் மகிந்த ராஜபக்ஷ சமாதான முயற்சிகளில் ஈடுபடுவார் என நம்பிக்கைகொண்டு - சிங்கள மக்கள் கூட - அவருக்கு வாக்களிக்க முடியாது.

இந்நிலையில் அவரின் வாக்கு வங்கியில் சரிவை ஏற்படுத்தும் முயற்சியில், பண்டாரநாயக்க குடும்பம் ஈடுபட்டிருப்பது அவருக்குப் பாதகமானதாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க மகிந்தராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றவாறான பிரச்சாரத்தையே மேற்கொண்டு வருகிறார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி மட்டுமல்ல தானும் இனவாதத்திற்கு எதிரானவர் என்பதுபோல காட்டிக்கொள்வதில் சனாதிபதி சந்திரிகா முனைப்பாக இருக்கின்றார்.

"மகிந்தவின் சிந்தனைகள்" அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைப் வெளிப்படுத்தவில்லை என்பது அவரின் கருத்தாகும். அவ்வாறு அவர் கூறுவதற்கு அவரதும் பண்டாரநாயக்க குடும்பத்தினதும், நலன்கள் காரணமாக இருப்பினும் கூட மகிந்த ராஜபக்ஷவின் பலவீனம் அதாவது கட்சிக்குள் அவரின் பிடி இறுக்கமானதாகஇல்லை என்பது வெளிப்படுகின்றது. கட்சிக்குள் அவருக்கு கணிசமான செல்வாக்கு உள்ளமையினாலேயே அவரால் சனாதிபதி வேட்பாளராக முடிந்துள்ளபோதிலும் வேட்பாளராகிவிட்டால் கட்சிக்குள் அவரது செல்வாக்கு அதிகரித்துவிடும் அல்லது பண்டாரநாயக்க குடும்பத்தில் எதிர்ப்பு பலவீனமாகிவிடும் என நம்பப்பட்டுவந்தது. ஆனால் அது சரியாகிவிடவில்லை. ஏனெனில் அவ்வாறு சரியாகியிருந்தால் இன்னமும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அநுரா பண்டாரநாயக்கவும் முரண்டுபிடித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

அதேவேளை இம்முறை வரவு செலவுத் திட்டம் மகிந்தராஜபக்ஷவுடன் முரண்பட்டுக் கொண்டு கட்சிக்குள் இருப்போருக்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்திருக்கிறது.



அதாவது இம்முறை வரவு-செலவுத் திட்டம் மகிந்தராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. இதில் தி.மு.ஜெயரட்ணவின் மலையக அபிவிருத்தி அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இது மறதியாகவிடப் பட்டுவிட்டது என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும்? அவ்வாறு மறதியாகவிடப்பட்டிருப்பின் சிறிலங்கா குறித்து கவலைப்படுவதைத் தவிர வேறெதுவும் செய்யமுடியாது.

ஆனால் இது மறதியாக விடப்படவில்லை. தி.மு.ஜெயரட்ண மகிந்தராஜபக்ஷவின் போட்டியாளராக இருந்து வந்தமையே இதற்குக் காரணமாகும். ஏனெனில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பின்னர் பிரதமராகவும் தற்போது சனாதிபதி வேட்பாளராகவும் இருக்க தனக்குத் தகுதியிருந்ததாகவும் கட்சி பிளவுபடாதிருப்பதற்காகத்தான் அவற்றை தியாகம் செய்துவிட்டதாகவும் தி.மு.ஜெயரட்ண அண்மையில் கூறியிருந்தார். இதன் காரணமாகவே அவரது அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படாது விடப்பட்டிருக்கிறது.

எனவே இதுவும் கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அநுரா ஆகியோர் மட்டும் கட்சிக்குள் தனித்துவிடப்படவில்லை அவருக்கு ஆதரவான குழு ஒன்று கட்சிக்குள் இன்னமும் செயற்பட்டுக்கொண்டிருப்பதையே காட்டுகிறது.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையும் அவர் கட்சிக்குள் பலம் வாய்ந்தவராக எதிர்ப்பு அற்றவராக உள்ளார் எனக் கூறிவிடமுடியாது. உண்மையில் கருஜெயசூரிய ரணில் விக்கிரமசிங்கவின் போட்டியாளராக வேயுள்ளார்.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி வகித்தபோது, இனப்பிரச்சினை விவகாரத்தில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பது தற்பொழுது வெளிப்பட்டு வருகின்றது. இதனை நவீன் திசாநாயக்க, மிலிந்தமொறகொட போன்றோர் வெளிப்படுத்தியும் வருகின்றனர். இது எதனைக் காட்டுகின்றதென்றால் ரணில் விக்கிரமசிங்க சமாதானக் கோஷத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டவராக இல்லை என்பதையேயாகும்.



அதனால் அவர் ஒருபக்கத்தில் இனவாதிகளைத் திருப்திப்படுத்தும் வகையிலான பிரச்சாரத்தை முன்னெடுக்க அனுமதித்துள்ளார்போல தெரிகிறது. அதாவது சமாதானப் பேச்சுக்காலத்தில் மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பல் தொடர்பாக முன்னர் முப்படைகளிலும் தளபதியாக இருந்த சனாதிபதி சந்திரிகாமீது ரணில் அரசாங்கத்தால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அல்லது அவ்வாறு சர்வதேசத்தை நம்பவைக்க முயற்சி எடுக்கப்பட்டது.

அவ்வாறுதான் அன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதற்கான "புகழை" தான் எடுத்துக்கொள்ளவும் முயற்சித்தார்.



இப்போது அதற்குப் போட்டியாளராக ஐ.தே.கவும் முன்வந்துள்ளது. இது எதனைக் குறிக்கிறதென்றால் ரணில் விக்கிரசிங்க சனாதிபதியானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஒத்துழைப்பை எதற்கு பெறப்போகிறார் என்பதையேயாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தை, எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பு, சர்வசனவாக் கெடுப்பு என்பதெல்லாம் சிறிலங்காவின் அகராதியில் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி, தமிழ் மக்களை அழிப்பது என்பது தமிழ் மக்களுக்கு எப்பொழுதோ புரிந்துவிட்டவிடயம். இதன் காரணமாகவே அவர்கள் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் பிரிந்துசெல்வது என்ற தீர்மானத்தை எடுத்தார்கள்.

ஆனால் இன்னமும் கூட தமிழ்மக்களை இதுகுறித்து நம்பவைக்கலாம் என சிலர் எண்ணுவதும் வேறுசிலர் மகிந்தராஜபக்ஷவோ, ஜே.வி.பியோ அல்லது ஜாதிகஹெல உறுமயவோ கூட இனவாதிகள் அல்ல என நிரூபிக்க முயல்வதும், பரிதாபத்துக்குரியதாகும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மிலிந்தமொறகொடவும் நவீன் திசநாயக்கவும் சதிசெய்வதான ஒரு பிரச்சாரம் ஒரு புறமும் நவீன் திசநாயக்க அவ்வாறு பேசவில்லை என ஊடகங்கள் மீது பழிபோடும் ஒரு பிரச்சாரமும் ஐ.தே.கவினரால் அவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இதேவேளை ஆலிஎலவில் மலையகத் தமிழ் மக்கள் முன்னிலையில் உரையாற்றிய அமைச்சர் டிலான் பெரேரா மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைப்பிரகடனமான "மகிந்த சிந்தனைகள் பற்றியோ, அவருடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிகள் குறித்தோ தமிழ் பேசும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அவர் சனாதிபதியானதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளையே கடைப்பிடிப்பார்" என்று கூறி யிருக்கிறார். இவையிரண்டும் ஒரே தன்மையானவையே.

ஆனால் உண்மை நிலை என்ன என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும் அவர்கள் இவ்விடயத்தில் முன்னரே தெளிவுடன் உள்ளமையினாலேயே இரு வேட்பாளர்களும் நம்பகத்தன்மையற்றவர்கள் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது என்பது வெளிப்படையானது.

இதேவேளை இரு கட்சிகளினதும் பிரதான வேட்பாளர்களும் உலகுக்குச் சமாதானமும் சிங்கள மக்களுக்கு இனவாதமும் பேசி தாம் எவ்வளவு பலவீனமான நிலையில் இருக்கின்றனர் என்பதை வெளிப்படுத்தி வருகின்றனர்.

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் - கார்த்திகை 2005

## வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

யா/வ.கி/6 திரு. மரியாம்பிள்ளை யோசேப்
யா/வ.கி/11 திரு. அந்தோனிமுத்து பவுலீனப்பு
யா/வ.கி/18 திருமதி. றோசலின் ஸ்ரீபன் வெண்டக்கோன்
யா/வ.கி/19 திருமதி. புளோறன்ஸ் சிறில்டா லோறமென்ட்
யா/வ.கி/21 திருமதி. எமிலின்மில்பிறட் அல்பிறட்
யா/வ.கி/24 திரு. பாக்கியநாதர் மதுரநாயகம்
யா/வ.கி/29 செல்வி. மேரிஜெயாமலிற் அருளானந்தம்
யா/வ.கி/33 திரு. தேவசகாயம் இசிதோர்
யா/வ.கி/36 திரு. அந்தோனி எலியாஸ்
யா/வ.கி/150 திரு. ஞானமுத்து சபாரத்தினம்
யா/வ.கி/177 திருமதி. அரியமலர் அருமைநாயகம்
யா/வ.கி/181 திரு. செல்லையா செகராசசேகரம்
யா/வ.கி/182 திருமதி. முத்துலட்சுமி குணசீலன்
யா/வ.கி/183 திரு. ஐயாமுத்து சிவபாலசுந்தரம்
யா/வ.கி/184 திரு. நாகப்பர் சிவக்கொழுந்து
யா/வ.கி/187 திரு. நல்லதம்பி நடராசா
யா/வ.கி/188 திருமதி. மேரிஜரிஸ் ரனிஸ்லோஸ்
யா/வ.கி/189 திருமதி. அம்பிகாபதி பொன்ராசா
யா/வ.கி/190 திருமதி. அன்னமலர் வேலுப்பிள்ளை
யா/வ.கி/199 திருமதி.மேரிஜெலன் றொக்சிவில் பிறட்செல்வக்குமார்
யா/வ.கி/200 திருமதி.மேரிஜெலன்றொக்சி வில்பிறட்செல்வக்குமார்
யா/வ.கி/201 திரு. மரியாம்பிள்ளை அல்போன்ஸ்
யா/வ.கி/203 திரு. அருளப்பு திபூசியஸ்
யா/வ.கி/204 திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி தியாகராசா
யா/வ.கி/207 திரு. செல்லையா பாலசுப்பிரமணியம்
யா/வ.கி/211 திரு. பெனடிக்ற் செபஸ்தியாம்பிள்ளை
யா/வ.கி/212 திரு. பெனடிக்ற் பிரான்சிஸ்
யா/வ.கி/224 திரு. மரியாம்பிள்ளை வயிற்றஸ்
யா/வ.கி/231 திரு. அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஜோ
யா/வ.கி/232 திரு. வெலிச்சோர் இராசநாயகம்
யா/வ.கி/241 திரு. மரியாம்பிள்ளை செபமாலை
யா/வ.கி/247 திரு. சேவியர் சிங்கராசா
யா/வ.கி/250 திரு. பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம்
யா/வ.கி/255 திரு. முத்தையா செல்லையா
யா/வ.கி/261 திரு. கோபாலபிள்ளை பொன்னம்பலம்
யா/வ.கி/266 திரு. இராசையா மார்க்கண்டு
யா/வ.கி/268 திரு. முருகுப்பிள்ளை இராசேந்திரம்
யா/வ.கி/271 திரு. வடிவேலு ஆனந்தராசா
யா/வ.கி/279 திரு. முத்தையா குணசீலன்
யா/வ.கி/284 திரு. வயிரமுத்து சதாசிவம்
யா/வ.கி/286 திருமதி. கத்தரினம்மா சவரிமுத்து
யா/வ.கி/288 திரு. சோமசுந்தரம் நவரத்தினம்
யா/வ.கி/289 திரு. அகுத்தீஸ் பெஞ்சமின்
யா/வ.கி/290 திரு. சண்முகம் பொன்னையா
யா/வ.கி/291 திரு.சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
யா/வ.கி/294 திரு. மரியதாஸ் ஜோன்சன்
யா/வ.கி/298 திரு. அந்திரேஸ் வேதநாயகம்
யா/வ.கி/370 திருமதி. சின்னமணி தணிகாசலம்
யா/வ.கி/374 திரு. வினாசித்தம்பி சிற்றம்பலம்
யா/வ.கி/390 திருமதி. பாக்கியம் இராசையா
யா/வ.கி/411 திரு. பாலசுப்பிரமணியம் ஆனந்தமயில்
யா/வ.கி/413 திரு. வயிரவிப்பிள்ளை சின்னத்தம்பி
யா/வ.கி/432 திரு. நீக்கிலாஸ் செபஸ்தியாம்பிள்ளை
யா/வ.கி/458 திரு.கணபதிப்பிள்ளை தங்கவேலாயுதம்
யா/வ.கி/487 திருமதி. மரியநாயகி மரியாம்பிள்ளை
யா/வ.கி/506 செல்வி. மஞ்சுளா அருள்தாஸ்
யா/வ.கி/508 திருமதி. றீற்றம்மா சூசைப்பிள்ளை
யா/வ.கி/517 திரு. சின்னத்தம்பி அருந்ததி
யா/வ.கி/518 திருமதி. மேரிஅக்னெஸ் மதுரநாயகம்
யா/வ.கி/519 திரு. மிக்கேல் ஆசீர்வாதம்
யா/வ.கி/520 திருமதி. அன்னப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
யா/வ.கி/522 திருமதி. ஜெயலலிதா கனகலிங்கம்
யா/வ.கி/523 திரு. அருளப்பு ஸ்ரனிஸ்லாஸ்
யா/வ.கி/526 திருமதி. காந்தமணி ஆழ்வாப்பிள்ளை
யா/வ.கி/529 திரு. நடராஜா இரத்தினசிங்கம்
யா/வ.கி/534 திரு. கணபதிப்பிள்ளை கமலநாதன்
யா/வ.கி/536 திரு. மரியாம்பிள்ளை செபமாலை
யா/வ.கி/551 திரு. சின்னையா கனகசபை
யா/வ.கி/561 திரு. யேமிஸ் எல்தேயுஸ்
யா/வ.கி/562 திரு. யேமீஸ் அல்பிறட்
யா/வ.கி/564 திரு. இராயப்பு பாவிலுப்பிள்ளை
யா/வ.கி/565 திரு. யோசேப் சூசைபெர்னாண்டோ
யா/வ.கி/566 திரு. ஆரோக்கியம் மரியாம்பிள்ளை
யா/வ.கி/567 திரு. யேமிஸ் யேசுராசா
யா/வ.கி/568 திரு. செபஸ்ரியாம்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்
யா/வ.கி/569 திரு. வரப்பிரகாசம் யேசுதம்பம்
யா/வ.கி/575 திரு. பிலிப்பு அந்தோனிப்பிள்ளை
யா/வ.கி/576 திரு. பிலிப் யேமிஸ்
யா/வ.கி/579 திருமதி. ஞானசவுந்தரி எலியாஸ்
யா/வ.கி/582 திரு. சின்னக்குட்டி கணபதிப்பிள்ளை
யா/வ.கி/585 திருமதி. பிரான்சிஸ்கா மத்தியாஸ்
யா/வ.கி/586 திரு. கபிரிகேல்பிள்ளை இராசநாயகம்
யா/வ.கி/587 திரு. சுவக்கீன் முத்துராசா
யா/வ.கி/588 திரு. யாக்கோப் வின்சன்
யா/வ.கி/593 திரு. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை
யா/வ.கி/594 திரு. அமிர்தநாயகம் பிரான்சீஸ்
யா/வ.கி/595 திரு. கிருஸ்ணன் விக்கினேஸ்வரநாதன்
யா/வ.கி/597 திரு. கபிரியேற்பிள்ளை மரியநாயகம்
யா/வ.கி/598 திரு. சூசைப்பிள்ளைஇம்மானுவேல் தேவதாஸ்
யா/வ.கி/600 திரு. தாவீதுப்பிள்ளை அல்போன்ஸ்
யா/வ.கி/604 திரு. வடிவேலு தில்லையம்பலம்
யா/வ.கி/605 திருமதி. குணகேஸ்வரி சிறிதரன்
யா/வ.கி/608 திரு. அல்பொன்ஸ் சதாநாயகம்
யா/வ.கி/609 திரு.இன்னாசிமுத்து அகஸ்தீன்ஜெனிபேட்
யா/வ.கி/611 திரு. பிலிப்பையா பிரான்சீஸ்சேவியர்
யா/வ.கி/612 திரு. சோமசுந்தரம் இளையதம்பி
யா/வ.கி/613 திரு. செல்லையா சுந்தலிங்கம்
யா/வ.கி/614 திரு. சோமசுந்தரம் இராசகிளி
யா/வ.கி/615 திரு. அல்போன்ஸ் மரியாம்பிள்ளை
யா/வ.கி/616 திரு. அல்போன்ஸ் கிங்ஸ்லிவில்பிறேட்
யா/வ.கி/620 திரு.பிரான்சீஸ்சேவியர் அன்ரன்மரியசீலன்
யா/வ.கி/625 திருமதி. கனகேஸ்வரி தனபாலசிங்கம்
யா/வ.கி/626 திரு. சிற்றம்பலம் செல்வக்குமார்
யா/வ.கி/628 திரு. பேதுறுப்பிள்ளை இராயப்பு
யா/வ.கி/630 திரு. செல்லத்துரை தங்கராசா
யா/வ.கி/633 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
யா/வ.கி/639 திரு. வயிரமுத்து வாரித்தம்பி
யா/வ.கி/640 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
யா/வ.கி/641 திரு. கணபதிப்பிள்ளை யோகராசா
யா/வ.கி/645 திரு. நல்லையா யோகராசா
யா/வ.கி/646 திரு. கந்தையா தனபாலசிங்கம்
யா/வ.கி/647 திரு. சுப்பிரமணியம் ஞானகணேஸ்
யா/வ.கி/648 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
யா/வ.கி/650 திரு. நடராசா தங்கராசா
யா/வ.கி/652 திரு. நல்லதம்பி சௌந்தரராசா
யா/வ.கி/654 திருமதி. அன்னப்பிள்ளை செல்லச்சாமி
யா/வ.கி/657 திருமதி. ஜெயராணி சந்திரசேகரம்
யா/வ.கி/660 திரு. தங்கராசா கோபாலசிங்கம்
யா/வ.கி/661 திரு. முத்துவேலு தங்கவேலு
யா/வ.கி/662 திரு. தம்பிமுத்து திருபாலசிங்கம்
யா/வ.கி/664 திரு. கண்ணையா இராசேந்திரம்
யா/வ.கி/677 திருமதி. நாகேஸ்வரி செல்லத்துரை
யா/வ.கி/678 திரு. கார்த்தியேசு தங்கராசா
யா/வ.கி/684 திரு. வயிரவப்பிள்ளை அண்ணாத்துரை
யா/வ.கி/685 திருமதி. தவமலர் ஆறுமுகம்
யா/வ.கி/686 திருமதி. சோதிமலர் தவராசா
யா/வ.கி/687 திருமதி. சின்னப்பிள்ளை முத்துச்சாமி
யா/வ.கி/689 திரு. வல்லிபுரம் மகேந்திரராசா
யா/வ.கி/690 திருமதி. இராசேஸ்வரி கணபதிப்பிள்ளை
யா/வ.கி/693 திரு. பொன்னையா சிவகுலேந்திரன்
யா/வ.கி/697 திரு. வயிரமுத்து பொன்னம்பலம்
யா/வ.கி/700 திரு. கணபதிப்பிள்ளை ஆனந்தராசா
யா/வ.கி/703 திருமதி. யோகராணி குணராசலிங்கம்
யா/வ.கி/704 திருமதி. உதயகுமாரி அண்ணாமலை
யா/வ.கி/705 திரு. கணபதிப்பிள்ளை தருமராசா
யா/வ.கி/706 திரு. வேல்விணாயகம் தங்கேஸ்வரன்
யா/வ.கி/707 திரு. இராமசாமி அருந்தவராஜா
யா/வ.கி/708 திரு. வேலாயுதம்பிள்ளை வீரசிங்கம்
யா/வ.கி/709 திருமதி. புஸ்பமலர் ஆறுமுகம்
யா/வ.கி/710 திரு. வயிரமுத்து தர்மகுலசிங்கம்
யா/வ.கி/711 திரு. நாராயணசாமி நந்தகோபாலசாமி
யா/வ.கி/712 திரு. சுப்பிரமணியம் அருமைத்துரை
யா/வ.கி/714 திரு. அப்புக்குட்டி இரத்தினசிங்கம்
யா/வ.கி/715 திரு. நடேசு புவனேஸ்வரன்
யா/வ.கி/720 திரு. கணபதிப்பிள்ளை குலசிங்கம்
யா/வ.கி/721 திரு. நடராசா திருமொழிச்செல்வம்
யா/வ.கி/724 திருமதி. சிவபாக்கியம் நடராசா
யா/வ.கி/726 திருமதி.அலிஸ்செல்வரஞ்சிதம் சின்னையா
யா/வ.கி/727 திரு. சங்கரப்பிள்ளை சபாபதிப்பிள்ளை
யா/வ.கி/730 திரு. அருளப்பு நவரத்தினம்
யா/வ.கி/737 திரு. சேவியர் சிறில்
யா/வ.கி/742 திருமதி.தவமணிதேவி கைலாயபாலசிங்கம்
யா/வ.கி/743 திருமதி. திரேசம்மா யோன்லோறற்
யா/வ.கி/748 திருமதி. நாகமுத்து செல்லத்துரை
யா/வ.கி/749 திருமதி. யோகேஸ்வரி சிவகுமார்
யா/வ.கி/751 திரு. கணபதிப்பிள்ளை சிறீஸ்காந்தராசா
யா/வ.கி/752 திரு. சின்னையா தம்பிஐயா
யா/வ.கி/753 திரு. சின்னர் தங்கவேலு
யா/வ.கி/756 திருமதி. கலாவதி ஈஸ்வரன்
யா/வ.கி/757 திரு. தம்பிஐயா ரவிராஜா
யா/வ.கி/761 திரு. பர்ணபாஸ் ஜவின்றெக்ஸ்
யா/வ.கி/763 திரு. முருகேசு பரமேஸ்வரன்
யா/வ.கி/765 திரு. கணேசபிள்ளை யோகேஸ்வரன்
யா/வ.கி/766 திருமதி. சிவலட்சுமி பாலசுப்பிரமணியம்
யா/வ.கி/767 திரு. முருகேசு கந்தசாமி
யா/வ.கி/771 திருமதி. பூமணி நவரட்ணம்
யா/வ.கி/772 திரு. மயில்வாகனம் ஜெயராசா
யா/வ.கி/776 திரு. கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார்
யா/வ.கி/781 திரு.முருகுப்பிள்ளை உமையாள் திருமகன்
யா/வ.கி/782 திருமதி. மல்லிகாமலர் கந்தசாமி
யா/வ.கி/783 திரு. நாகையா செல்லையா
யா/வ.கி/784 திரு. சிற்றம்பலம் நவரட்ணம்
யா/வ.கி/789 திரு. இராசா அமரசிங்கம்
யா/வ.கி/791 திருமதி. தவமணி கறுவல்தம்பி
யா/வ.கி/792 திரு. ஆறுமுகம் கிட்ணபிள்ளை
யா/வ.கி/804 திரு. சின்னத்துரை இரத்தினசபாபதி
யா/வ.கி/824 திருமதி. அந்தோனிக்கம் ஆசீர்வாதம்
யா/வ.கி/837 திரு. வேல்விணாயகம் லோகேஸ்வரன்
யா/வ.கி/843 திரு. நடராசா ரகுபதி
யா/வ.கி/844 திருமதி. ருக்மணிதேவி கருணாநிதி
யா/வ.கி/850 திரு. சின்னத்துரை ஸ்ரீகந்தசாமி
யா/வ.கி/851 திருமதி. பத்மசிறி தவேந்திரன்
யா/வ.கி/857 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்
யா/வ.கி/859 திரு. ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை
யா/வ.கி/863 திரு. சின்னத்தம்பி கணேஸ்
யா/வ.கி/867 திரு. யாக்கோப்பு எட்வின்ஜெயராசா
யா/வ.கி/869 திருமதி. கணேசபதி பாலச்சந்திரன்
யா/வ.கி/876 திரு. சண்முகம் வேலுப்பிள்ளை
யா/வ.கி/881 திருமதி. தங்கமலர் சபாரட்ணம்
யா/வ.கி/882 திரு. மகாலிங்கம் கேசவஞானம்
யா/வ.கி/884 திருமதி.ஜெயகிருஷ்ணாவதி மகேந்திரராசா
யா/வ.கி/887 திரு. சின்னத்தம்பி தம்பித்துரை
யா/வ.கி/889 திரு. குழந்தைவேல் பொன்னையா
யா/வ.கி/892 திரு. இராசையா செல்லத்தம்பி
யா/வ.கி/893 திரு. வடிவேலு சந்திரலிங்கராஜா
யா/வ.கி/895 திரு. கந்தசாமி ரங்கநாதன்
யா/வ.கி/898 திரு. முருகுப்பிள்ளை இலட்சியகுமார்
யா/வ.கி/901 திரு. கணபதிப்பிள்ளை விஜயகுமார்
யா/வ.கி/902 திரு. கந்தசாமி சிவராசலிங்கம்
யா/வ.கி/907 திருமதி. சந்திரவதனா துரைசிங்கம்
யா/வ.கி/908 திரு. நல்லையா சாந்தகுமார்
யா/வ.கி/910 திரு. ஆசீர்வாதம் வின்சேந்திமருசலீன்
யா/வ.கி/911 திரு. பிலிப்பையா ஸ்ரனிஸ்லாஸ்
யா/வ.கி/913 திரு. கபரியேல் செல்வரத்தினம்
யா/வ.கி/914 திருமதி. மேரியோசேப்பின் யேசுராசா
யா/வ.கி/916 திருமதி. ரஞ்சினிதேவி புவனேந்திரன்
யா/வ.கி/919 திருமதி. சரஸ்பதி மரியநாயகம்
யா/வ.கி/920 திரு. கந்தையா குமாரவேல்
யா/வ.கி/921 திரு. வென்சஸ்லாஸ் பிரான்சீஸ்
யா/வ.கி/922 திரு. வேலாயுதர் செல்வநாயகம்
யா/வ.கி/924 திரு. செல்லையா ஆறுமுகம்
யா/வ.கி/927 திரு. இராசரட்ணம் குணரட்ணம்
யா/வ.கி/928 திரு. அந்தோனிப்பிள்ளை பெனவந்தோர்
யா/வ.கி/929 திரு.சந்தியாப்பிள்ளைஅன்ரனி சூசைதாசன்
யா/வ.கி/932 திரு. பூபாலு தெய்வபுலேந்திரன்
யா/வ.கி/933 திரு. அருணாசலம் வேலுப்பிள்ளை
யா/வ.கி/935 திரு. பிலிப்பு பாக்கியநாதர்
யா/வ.கி/940 திரு. கணபதிப்பிள்ளை மரியாம்பிள்ளை
யா/வ.கி/943 திரு. கணபதிப்பிள்ளை கணேசகுமார்
யா/வ.கி/949 திரு. வேலுப்பிள்ளை இராசரட்ணம்
யா/வ.கி/950 திரு. வரப்பிரகாசம் ஞானப்பிரகாசம்
யா/வ.கி/951 திரு. அந்தோனிப்பிள்ளை மரியசீலன்
யா/வ.கி/953 திரு. செல்லையா பரமானந்தம்
யா/வ.கி/956 திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம்
யா/வ.கி/958 திருமதி. தனலட்சுமி செல்வகுலேந்திரன்
யா/வ.கி/959 திரு. சபாரத்தினம் தனபாலசிங்கம்
யா/வ.கி/961 திரு. கணபதி விக்கினேஸ்வரன்
யா/வ.கி/962 திரு. கஸ்மீர் நீக்கிலாப்பிள்ளை
யா/வ.கி/964 திரு. ஆறுமுகம் கணேசலிங்கம்
யா/வ.கி/973 திரு. சின்னப்பொடி நல்லார்
யா/வ.கி/975 திரு. ஐயாக்குட்டி துரைசிங்கம்
யா/வ.கி/978 திருமதி.மேரிஅனஸ்ரின்திரேசா சிங்கராயர்
யா/வ.கி/986 திரு. ஆசீர்வாதம் மோசேஸ் தார்சிசியஸ்
யா/வ.கி/988 திரு. ஆசீர்வாதம் பிரான்சிஸ்பாலசுந்தரம்
யா/வ.கி/989 திரு. செல்லத்துரை நாகலிங்கம்
யா/வ.கி/990 திரு. கந்தையா குமரையா
யா/வ.கி/993 திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்
யா/வ.கி/997 திரு. மரியாம்பிள்ளை கிறிசாந்து
யா/வ.கி/1000 திருமதி. இலட்சியராணி தங்கவேலு
யா/வ.கி/1008 திரு. கணபதிப்பிள்ளை இராசலிங்கம்
யா/வ.கி/1019 திரு. கணபதிப்பிள்ளை தவறஞ்சன்
யா/வ.கி/1020 செல்வன். குணபாலா ஜெகந்பிரேம்நாத்
யா/வ.கி/1021 திரு. தியாகராசா ஸ்ரீஸ்கந்தராசா
யா/வ.கி/1023 திரு. வேலுப்பிள்ளை கெங்காதரம்
யா/வ.கி/1037 திரு. யொஸ்தினப்பு ஜோர்ஜ்மரியதாஸ்
யா/வ.கி/1038 திரு. சின்னப்பு சிவசாமி
யா/வ.கி/1039 திரு. வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்
யா/வ.கி/1040 திரு. வல்லிபுரம் தவராஜா
யா/வ.கி/1041 திரு.வேலுப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை
யா/வ.கி/1042 திரு. மகாலிங்கம் சபாநேசன்
யா/வ.கி/1043 திரு. யாக்கோப்பு தேவதாஸ்
யா/வ.கி/1045 திரு. சின்னத்தம்பி ஆனந்தராசா
யா/வ.கி/1046 திரு. தங்கவேலு திருநாவுக்கரசு
யா/வ.கி/1052 திரு. கணபதிப்பிள்ளை வேலாயுதமூர்த்தி
யா/வ.கி/1056 திருமதி. புஸ்பராணி தனபாலசிங்கம்
யா/வ.கி/1059 திரு. தம்பிஐயா குலசிங்கம்
யா/வ.கி/1060 திரு. அருமைலிங்கம் கணேசலிங்கம்
யா/வ.கி/1061 திரு. சின்னத்தம்பி சிவராசா
யா/வ.கி/1063 திரு. செபஸ்தியாம்பிள்ளை அருமைத்துரை
யா/வ.கி/1065 திரு. ஞானப்பிரகாசம் எயிலோஸ்
யா/வ.கி/1070 திரு. வேலாயுதம்பிள்ளை ஜெயபாலக்கிஸ்ணன்
யா/வ.கி/1072 திருமதி. சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை
யா/வ.கி/1073 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/வ.கி/1079 திரு.மரியாம்பிள்ளை பியதாஸ்பத்திநாதர்
யா/வ.கி/1082 திரு. வயிரவிப்பிள்ளை விஜயகுமார்
யா/வ.கி/1083 திரு. முத்து சிவலிங்கம்
யா/வ.கி/1085 திருமதி. செல்லமணி சுப்பிரமணியம்
யா/வ.கி/1090 திரு. செல்லையா புண்ணியமூர்த்தி
யா/வ.கி/1091 திருமதி.செல்வலட்சுமி தட்சணாமூர்த்தி
யா/வ.கி/1097 திரு. இராயப்பு இராசசூரி
யா/வ.கி/1098 திரு. முத்தையா கிருஷ்ணபிள்ளை
யா/வ.கி/1099 திருமதி. புஸ்பலதா பாலச்சந்திரன்
யா/வ.கி/1100 திரு. கந்தசாமி சுப்பிரமணியம்
யா/வ.கி/1106 திரு. மயில்வாகனம் துரைசிங்கம்
யா/வ.கி/1108 திரு. முருகுப்பிள்ளை கார்த்திகேசு
யா/வ.கி/1110 திருமதி. இராசம்மா இராசரத்தினம்
யா/வ.கி/1116 திரு. நற்குணம் மயில்வாகனம்
யா/வ.கி/1117 திரு. குணரட்ணம் அன்ரனிதாஸ்
யா/வ.கி/1119 திரு. சின்னையா தம்பு
யா/வ.கி/1120 திருமதி. சுந்திரமனோகரி குலசேகரம்
யா/வ.கி/1121 திரு. கந்தையா இராமநாதன்
யா/வ.கி/1122 திரு.கணபதிப்பிள்ளை வல்லிபுரநாதன்
யா/வ.கி/1127 திரு. பொன்னுத்துரை சக்திவேல்
யா/வ.கி/1128 திரு. வயிரவிப்பிள்ளை சிவசாமி
யா/வ.கி/1129 திரு. வல்லிபுரம் பொன்னம்பலம்
யா/வ.கி/1135 திரு. செல்லத்துரை நீதிகுலசிங்கம்
யா/வ.கி/1141 திரு. கண்ணையா கனகலிங்கம்
யா/வ.கி/1143 திரு.தாமோதரம்பிள்ளை கணபதிப்பிள்ளை
யா/வ.கி/1146 திருமதி. வனிதாரஞ்சிதம் சிவானந்தராசா
யா/வ.கி/1153 திருமதி. இராசமணி சித்திரவடிவேல்
யா/வ.கி/1154 திருமதி. சறோஜா ஜெயவீரசிங்கம்
யா/வ.கி/1156 திரு. வடிவேலு சௌந்தரராஜா
யா/வ.கி/1158 திரு. வயிரவிப்பிள்ளை வல்லிபுரம்
யா/வ.கி/1161 திரு. சந்தியா அருட்பிரகாசம்
யா/வ.கி/1166 திரு. மரியாம்பிள்ளை கிறிஸ்வாசின்டன்
யா/வ.கி/1173 திருமதி. யோகம்மா திருச்செல்வம்
யா/வ.கி/1182 திருமதி. சதாசினி கணேசமூர்த்தி
யா/வ.கி/1183 திரு. சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம்
யா/வ.கி/1195 திரு. தேவசகாயம்பிள்ளை அருளானந்தம்
யா/வ.கி/1197 திரு. தியாகராஜா இருதயநாதன்
யா/வ.கி/1208 திருமதி. யூறின்பிறேமலோஜனி மரியபேனாட்
யா/வ.கி/1220 திருமதி. மரியமலரம்மா சந்தியோகு
யா/வ.கி/1225 திருமதி. பத்திரசியா கஸ்பார்
யா/வ.கி/1234 திருமதி. நிர்மலா அல்பிரட்
யா/வ.கி/1237 திரு. சுப்பிரமணியம் நித்தியானந்தன்
யா/வ.கி/1242 திரு. சங்கரப்பிள்ளை குணநாயகம்
யா/வ.கி/1254 திரு. இராசரட்ணம் ஜெயரட்ணசீலன்
யா/வ.கி/1257 திருமதி. மரியமலர் அன்ரனி
யா/வ.கி/1259 திரு. செல்லத்துரை விசுவலிங்கம்
யா/வ.கி/1262 திருமதி. புவனேஸ்வரி தர்மலிங்கம்
யா/வ.கி/1263 திருமதி. மேரிஅக்கினேஸ் மரியநாயகம்
யா/வ.கி/1264 திரு. யேமிஸ் வெனிஸ்லாஸ்
யா/வ.கி/1272 திரு. வடிவேலு அருமைநாயகம்
யா/வ.கி/1281 திரு. சின்னையா இராசேந்திரம்
யா/வ.கி/1286 திரு. கந்தையா இராசதுரை
யா/வ.கி/1291 திரு. முருகேசு தவராசா
யா/வ.கி/1308 திரு. சின்னத்துரை சிவபாதசுந்தரம்
யா/வ.கி/1315 திரு. கிறிசாந்துாஸ் மரியஎட்மன்ராஜ்குமார்
யா/வ.கி/1326 திரு. வேலுப்பிள்ளை பொன்னையா
யா/வ.கி/1332 திரு. வேலுப்பிள்ளை நடராசா
யா/வ.கி/1335 திரு. அந்தோனிப்பிள்ளை அல்பிறட்
யா/வ.கி/1336 திரு. வல்லி சின்னத்தம்பி
யா/வ.கி/1338 திரு. கார்த்திகேசு நல்லலிங்கம்
யா/வ.கி/1340 திரு. சூசையப்பு மரியதாசன்குவாஸ்
யா/வ.கி/1341 திரு.அந்தோனிப்பிள்ளை மரியதுரை
யா/வ.கி/1347 திரு. ஆறுமுகம் வேலும்மயிலும்
யா/வ.கி/1348 திரு. முருகுப்பிள்ளை மயில்வாகனம்
யா/வ.கி/1349 திரு. செல்வத்துரை தனபாலசிங்கம்
யா/வ.கி/1350 திரு. கணபதிப்பிள்ளை கமலநாதன்
யா/வ.கி/1352 திரு. சேவியர் அந்தோனிப்பிள்ளை
யா/வ.கி/1353 திரு. அருளப்பு திபூசியஸ்
யா/வ.கி/1355 திரு. சாணையா இராசதுரை
யா/வ.கி/1356 திரு.ஜுலெஸ்யோன் அன்ரூஸ்(றிச்சேட்)
யா/வ.கி/1357 திரு.யோஸ்லோறன்ஸ் கிறிஸ்ரிஅன்ரன்
யா/வ.கி/1360 திரு. சின்னத்தம்பி நல்லதம்பி
யா/வ.கி/1361 திரு. சிற்றம்பலம் வேலுச்சாமி
யா/வ.கி/1362 திருமதி. மகாலட்சுமி உதயச்சந்திரன்
யா/வ.கி/1365 திருமதி. மல்லிகா யோகலிங்கம்
யா/வ.கி/1368 திரு.திருக்குணபாலசிங்கம் தெய்வராசா
யா/வ.கி/1369 திரு. நடராசா தியாகேஸ்வரன்
யா/வ.கி/1370 திரு. கதிர்காமு யோகராசா
யா/வ.கி/1371 திரு. சுப்பிரமணியம் சுபாஸ்கரன்
யா/வ.கி/1372 திரு. வேலுச்சாமி செல்வக்குமார்
யா/வ.கி/1373 திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை
யா/வ.கி/1374 திரு. கதிரேசு அருந்தவச்செல்வன்
யா/வ.கி/1375 திரு. முத்தையா பாலசுந்தரம்
யா/வ.கி/1378 திரு. கதிர்காமு மணிவண்ணன்
யா/வ.கி/1379 திரு. செல்வராசா சந்திரசேகரம்
யா/வ.கி/1380 திரு. கந்தையா சோமசுந்தரம்

(9ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் பிரச்சார அலுவலகம் மீது தாக்குதல்
# சிறி. முஸ்லிம் காங்கிரஸ் முறைப்பாடு

சம்மாந்துறையில் கடந்த புதன்கிழமை இரவு தமது தேர்தல் பிரச்சார அலுவலகம் தாக்கப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சம்மாந்துறை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயிலும் அவரின் ஆதரவாளர்களும் வந்து தம்மைத் தாக்கினர். பயமுறுத்தும் வகையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அன்வர் இஸ்மாயில் சம்மாந்துறை பொலிசில் முறையிட்டுள்ளார். (32)

# தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அமெரிக்க அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் இரு தனியார் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு நிதியுதவி செய்ய அமெரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த இரு கண்காணிப்பு அமைப்புக்களும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நியாயமானதும் சுதந்திரமானதுமான முறையில் நடைபெற உதவும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தப் பணிகளுக்காக அமெரிக்க அரசாங்கம் ஒரு இலட்சம் டொலர் அளவில் வழங்க முடிவு செய்துள்ளது. அதேவேளை இந்தத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் பொழுது இது வரை குறிப்பிடத்தக்க அளவு வன்செயல் சம்பவங்கள் இடம்பெறவில்லை எனத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன. (32)

# இரண்டரை இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 386 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாக வவுனியா தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது. மன்னாரில் 78 ஆயிரத்து 906 வாக்காளர்களும், வவுனியாவில் ஒரு இலட்சத்து 884 வாக்காளர்களும், முல்லைத்தீவில் 66 ஆயிரத்து 596 வாக்காளர்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். (32)

## இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜம்
## யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம்
## 'சுசகன' கடன் திட்டத்தின் கீழ் கடன் பெற உங்களுக்கு நாம் உதவுகின்றோம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜீவனோபாய மிகச்சிறிய ,சிறிய, மத்தியதர முயற்சியாளர்கட்கு "மீளவும் வியாபாரத்தில்" என்னும் புதிய திட்டத்தினை இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜம் யாழ்ப்பாணம் வர்த்த தொழில் துறை மன்றம் மூலம் யாழ்மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது. மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்" சுசகன" கடன் திட்டம் மூலம் கடன் பெறும் முயற்சியாளர்கட்கள் உதவும் திட்டமும் அவற்றுள் ஒன்றாகும். பல்வேறு காரணங்களினால் குறித்த "சுசகன" கடன் திட்டத்தின்கீழ் கடன் பெறுவதில் கஷ்டப்படுவதாகப் பல முயற்சியாளர்களிடமிருந்து இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனங்களின் சமாஜத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனவே "சுசகன" கடன் திட்டத்தின் கீழ் கடன் வசதிகளைப்பெறமுடியாதவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் புதிய தரவுகளை 2005.11.15ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு அல்லது யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தில் கையளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*நேரடியாகக் கையளிக்க விரும்புவோர்*
***திட்ட இணைப்பாளர்,***
*"மீளவும் வியாபாரத்தில்"*
***யாழ்ப்பாணம் வர்த்தக***
***தொழில்துறை மன்றம்,***
*601, நாவலர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொலைநகல்: 021-2226609.*

*அனுப்பவிரும்புவோர்,*
***திட்ட இயக்குநர்,***
*"மீளவும் வியாபாரத்தில்"*
***இலங்கை வர்த்தக கைத்தொழில்***
***சம்மேளனங்களின் சமாஜம்,***
*3ஆம் மாடி,*
*53, வொக்ஷோல் வீதி, கொழும்பு-02*
*தொலைநகல்: 011-2304255/2304257*

## மாதிரிப் படிவம்

**முழுப்பெயர்:-**

**விலாசம்:-**

**தொலைபேசி இலக்கம் [இருப்பின்]:-**

**சுசகன கடன்பெறத் தொடர்புகொண்ட வங்கி/நிதி நிறுவனத்தின்பெயர்:-**

**கிளையின் விலாசம்:-**

**கடன்தொகை:-**

**கடனுக்கு மனுச்செய்த திகதி:-**

**[கடன் வழங்கத் தவறியமைக்காகத் தெரிவிக்கப்பட்ட காரணங்களுக்கெதிராக[X] அடையாளமிடவும்],**

| | | |
|---|---|---|
| 01. | கோரப்பட்ட பிணைகள் கொடுக்கமுடியாமை. | |
| 02. | பாதிக்கப்பட்ட வியாபார ஆதனம் 100 மீற்றர் எல்லைக்குள் அமைந்திருத்தல். | |
| 03. | சமர்ப்பிக்கப்பட்ட பிணைகள் வங்கிக்குத் திருப்தியளிக்காமை | |
| 04. | பிணையாளர்கள் முன்பு பிணை நின்றவர்களால் கடன் ஒழுங்காக திருப்பிச்செலுத்தப்படாமை. | |
| 05. | நடைமுறைக் கணக்கு திருப்திகரமாக கொண்டு நடத்தப்படாமை. | |
| 06. | சமர்ப்பிக்கப்பட்ட பிணை போதாதிருத்தல். | |
| 07. | வியாபாரத்திட்டம் கடனைத்திருப்பிச் செலுத்தக்கூடிய தகைமை யற்றிருத்தல். | |
| 08. | வங்கி முகாமையாளர்கள் கடன் மனுவுக்கான பத்திரங்களை வழங்க மறுத்தமை. | |
| 09. | "சுசகன" கடன் திட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இல்லை எனத் தெரிவித்தமை. | |
| 10. | வங்கிக்கிளையின் தலைமையலுவலகம் "சுசகன" கடன் தொடர்பாக கடன் மனுக்களை பெற வேண்டாமென அறிவித்ததாகத் தெரிவித்தமை | |
| 11. | இலங்கை மத்திய வங்கி புதிய "சுசகன" கடன் மனுக்களுக்கான நிதி மீளளித்தலுக்கான பதிவினை நிறுத்தியதாகத் தெரிவித்தமை. | |
| 12. | காலங்கடந்த பின்னர் "சுசகன" கடனுக்கு மனுச்செய்ததாகத் தெரிவித்தமை. | |
| 13. | "சுசகன" கடனுக்குப் பதிலாக தங்கள் வங்கியின் கடன்களை வழங்க முயற்சித்தல். | |
| 14. | ஏனையவை (குறிப்பிடவும்), | |

..............................  ..............................

திகதி (சி-13265) கையொப்பம்.

# SRI LANKA RED CROSS SOCIETY
# JAFFNA DISTRICT

in conjunction with the Australian Red Cross

## *VACANCY FOR YOUTH/ VOLUNTEER MANAGEMENT OFFICER*

We are seeking for a motivated person with qualifications and demonstrated experience in the area of volunteer management to work with the Organistional Development Delegate of the Australian Red cross and the Branch Executive Officer of the Sri Lanka Red Cross, Jaffna Branch. The successful candidate will set up volunteer management system and regularly travel to Red Cross District Sub Branches and units to assist them in volunteer management.

**Duties applicable**

1. Work towards the achievement of Sri Lanka Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) goals through effective relations and teamwork.
2. Ensure understanding of roles, responsibilities lateral relationships and accountabilities.
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the Supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Implement activities including trainings and networking in youth and volunteer component of Organisational Development Plan and in according to the policies and procedures of volunteer management (VM).
2. Develop and implement a VM system at the Branch, District Sub - Bramch and unit level.
3. Recruit youth volunteers, advisors, and set up the committee.
4. Develop and volunteer database at the branch.
5. Prepare and circulate report on volunteer activities to relevant bodies.
6. Be responsible for assuring sub branches and units regularly update their database and sen to branch to forward to NHQ
7. Set up system to recruit, train, retain and recognise volunteers.
8. Set up specialised volunteer service (SVS) system.
9. Monitor and evaluate implementation of VM policy implementing at the Branch level.
10. Ensure appropriate, consistent and fair treatment of all volunteers.
11. Develop, implement and maintain a SLRCS volunteers identification system.
12. Supervise and monitor activities of the volunteers.
13. Conduct quarterly review meetings with volunteers at sub branches.
14. Actively participate in meetings with the VM coordinator at the NHQ.

**Qualifications:**

* Degree or Diploma in Social Work or equivalent community focussed education.
* Minimum 5 years experience with working with similar work.
* Excellent English both spoken and written.
* Experience as Red Cross volunteer is an asset.
* Very competitive salary will be offered to the successful applicant. Applications should be sent under registered mail before 26th November 2005 to:

**Branch Executive Officer**
Sri Lanka Red Cross Society,
Jaffna Branch,
No. 73, Kandy Road, Jaffna.

(சி.13271)

# சதாமுக்கு சோனியா எழுதிய கடிதம் காங்கிரசால் வெளியிடப்பட்டது



(புதுடில்லி)

சதாமுக்கு சோனியா எழுதிய கடிதத்தை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு ஈராக்கின் எண்ணெய்க்கு உணவுத் திட்டத்தில் காங்கிரஸ் கட்சி, நட்வர்சிங் ஆதாயம் பெற்றதாக அது பற்றி விசாரித்த ஐ.நாவின் வோல்கர் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. அப்போதைய ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கு காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி எழுதிய கடிதத்தை நட்வர்சிங் கொண்டு சென்று சதாமிடம் கொடுத்தார் என்று தகவல்கள் வெளியானது. அந்தக் கடிதத்தை இப்போது காங்கிரஸ் வெளியிட்டுள்ளது. அதில் எண்ணெய்க்கு உணவுத் திட்டம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

17.01.2001 இல் சதாமுக்கு சோனியா எழுதிய கடிதத்தில் ஈராக் மீது இன்னொரு நாட்டின் படைத் தாக்குதல் நடத்தியது வருத்தம் அளிக்கிறது. இதில் ஈராக் மக்கள் பாதிக்கப்பட்டது வேதனையளிக்கிறது. ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு மேலாதிக்கம் செலுத்துவதை காங்கிரஸ் எதிர்க்கிறது. பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலம் ஈராக்கை தனிமைப்படுத்த முடியாது. இந்தியா- ஈராக் நாடுகள் இடையே அரசியல் கலாச்சாரம் பொருளாதார பரிமாற்றம் இருக்க வேண்டும் என்பது தான் காங்கிரசின் நிலை என்று குறிப்பிட்டுள்ளார். 64 ஆவது பிறந்த தினத்தை யொட்டி சதாமுக்கு வாழ்த்துத் தெரிவித்து 24-04-2001 இல் சோனியா மற்றொரு கடிதம் எழுதியுள்ளார்.



சதாமுக்கு 09-08-2001இல் அப்போதைய பிரதமர் வாஜ்பாய் எழுதிய கடிதத்தின் நகலையும், காங்கிரஸ் வைத்துள்ளது. அதை நஜ்மா ஹெப்துல்லா தலைமையிலான சிறப்பு நல்லெண்ண குழு எடுத்துச் சென்று சதாமிடம் கொடுத்துள்ளது. அதில் இரு நாடுகள் இடையே நட்புறவு நீடிக்கும் அதைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்துவேன் என்று வாஜ்பாய் குறிப்பிட்டுள்ளார்.



புதுடில்லியில் நடந்த தொடர் குண்டு வெடிப்பில் பலியானவர்களுக்கான 13ஆம் நாள் சடங்குகள் சரோஜினி நகர் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

# குண்டுவெடிப்பு சந்தேகநபர் சாதாரண திருடனே

(புதுடில்லி)

டில்லிகுண்டுவெடிப்பில் சிக்கியவர் தீவிரவாதி அல்ல சாதாரண திருடன் என்பது தெரிய வந்துள்ளது.

இந்தியத் தலைநபர் டில்லியில் கடந்த ஒக்ரோபர்29ஆம் திகதி தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்தது. இதையடுத்து தீவிரவாதிகளை வேட்டையாடும் பணி முடுக்கி விடப்பட்டது. காஷ்மீர் மாநிலம் வடக்கு ஜம்மு பகுதியில் தோடா மாவட்டத்தில் நவம்பர் 5ஆம் திகதி ஒருவரை இராணுவத்தினர் பிடித்து விசாரணை நடத்தினர். அவர் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு உடையவர் என்றும், டில்லி குண்டுவெடிப்பில் தனக்குள்ள தொடர்பை ஒப்புக் கொண்டதாகவும் இராணுவ அதிகாரிகள் கூறினர்.

மேல் விசாரணைக்காக அவர் காஷ்மீர் பொலிசிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம் பொலிசார் துருவித்துருவி விசாரணை நடத்தினர் அதில் அவர் தீவிரவாதி அல்ல என்றும், சிறிய திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்பதும் தெரிய வந்ததாக ஜம்மு பொலிசார் கூறினர் இதையடுத்து அவர் விசாரணைக்காக டில்லி அனுப்பிவைக்கப்பட்டார்.

# சென்னைக்கு சென்ற சந்தேக நபர்கள் இலங்கைக்கே திருப்பப்பட்டனர்

இலங்கையில் இருந்து விமானம் மூலம் சென்னைக்கு சென்ற ஐந்து பேர், தீவிரவாதிகளாக இருக்கலாம் என்று சந்தேகக்கப்படுவதால் அவர்கள் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்பட்டனர்.

சென்னை, மும்பை டெல்லி கொல்கத்தா, ஐதராபாத் ஆகிய நகரங்களில் உள்ள விமான நிலையங்களில் தீவிரவாதிகள் ஊடுருவி விமானங்களைக் கடத்தத்திட்டமிட்டுள்ளதாக மத்திய உளவுத்துறைப் பொலிசுக்கு தகவல் கிடைத்தது அது குறித்து உள்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைக்கு உளவுத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் விமான நிலையங்களில் உள்ள பொலிசார் உஷார்படுத்தப்பட்டனர். பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. சந்தேகபடும் நபர்களைப் பிடித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இலங்கையில் இருந்து கடந்த வியாழன் மாலை 4.30 மணிக்கு ஜெட் ஏர்வேஸ் விமானம் மூலம் இஸ்ரேஸ்நாட்டைச் சேர்ந்த அல்மா கயத்பீடியோ, சுருபல் சையத், யாசிர் அபுதீயர் இப்ராகிம் யாமன், ஆபுதலியா முகமத் ஆகிய ஐந்து பேர்சென்னைக்குச் சென்றுள்ளனர்.

அவர்களிடம் சந்தேகப்படும் படியான பொருட்கள் எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் முன்னுக்குப்பின் முரணாகப்பேசினார் அவர்கள் பாலஸ்தீன தீவிரவாதிகளாக இருக்கலாம் என்று பொலிசார் சந்தேகம் அடைந்தனர் இதனையடுத்து சந்தேக நபர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

# 35 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பூ விழி மலர்வு 27 - 08 - 1983



பூமியில் உதிர்வு 10 - 10 - 2005

## செல்வி மகேந்திரம் பிரியதர்சினி

*(இளவாலை யாழ்ப்பாணம்)*





எமதருமைச் செல்வமே
அப்பா அப்பா என்றழைப்பாயே
அப்பாவின் உயிரே நீ தானே
எங்கு சென்றாய் எம் பிரியமே
அன்றலர்ந்த தாமரையே
மதிமுகம் கொண்ட பூந்தளிரே
புன்னகை பூத்த உன் வதனம்
பூவிழி கொண்ட உன் கனிவும்
பிரியா நீ பிருந்தா வனமே
உன் இனிய மொழி கேட்க
எம்மிதயம் துடிக்கிறதே
உன்னைக் காண தவிக்கிறோம்
எம் பிருந்தாவனமே.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

எமது செல்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் அன்று உதவிகள்,ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு 13.11.2005 (ஞாயிற்றுக்கிழமை)இன்று அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யும் வீட்டுக்கிரியையும் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, பெரிய மாமாகுடும்பம்,
ஆசைமாமா குடும்பம்,அத்தை குடும்பம்,
பெரியப்பா குடும்பம்,சித்தப்பா குடும்பம்.

தகவல்:-
மா.மகேந்திரம்
(புதுக்குடியிருப்பு)

(6920)

## மும்பை குண்டுவெடிப்பு

# முக்கிய சந்தேக நபர் அபுசலீம் இந். அதிகாரிகளிடம் ஒப்படைப்பு!

(லிஸ்பன்)

மும்பை தொடர் குண்டுவெடிப்பில் முக்கிய தொடர்புடையவர் என கருதப்படும் அபுசலீம் மற்றும் அவரது காதலி மோனிகா பேடியை போர்த்துக்கல் அதிகாரிகள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்களை நாடு கடத்த லிஸ்பன் உச்ச நீதிமன்றம் ஒப்புதல் கொடுத்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மும்பையில் கடந்த 1993 ஆம் ஆண்டு தொடர் குண்டுகள் வெடித்தன. இதில் 257 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர். ரூ.30 கோடிக்கும் மேல் பொருட் சேதம் ஏற்பட்டது. இந்தக் குண்டுவெடிப்பில் தாவூத் இப்ராகீம், அபுசலீம் ஆகியோருக்கு தொடர்பு இருப்பது புலன் விசாரணையில் தெரியவந்தது. இதனையடுத்து இவர்கள் இருவரும் சிபிஐ வலையில் சிக்காமல்வெளிநாடுகளுக்கு தப்பி ஓடிவிட்டனர். இந்த நிலையில் அபுசலீம் மற்றும் அவரது காதலிமோனிகா பேடியை போர்த்துக்கல் பொலிசார் கைது செய்தனர்.போலிகடவுச் சீட்டில் தங்கள் நாட்டில் நுழைய முயற்சி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

போர்த்துக்கல் சிறையில் அடைக்கப்பட்ட இந்த இருவரையும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினர் போர்த்துக்கல் அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தனர். இதனை எதிர்த்து இந்தியாவிடம் தங்களை ஒப்படைக்கக் கூடாது என அபுசலீமும், மோனிகா பேடியும் அங்குள்ள நீதிமன்றில் மனுதாக்கல் செய்தனர். இந்த விவகாரம் கடந்த மூன்று வருடங்களாக நீடித்தது. கீழ் நீதி மன்று, உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம், பின்னர் அரசியல் அமைப்பு நீதிமன்றம் என கடைசி வரை சென்று அவர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனை யடுத்து அவர்கள் இருவரையும் போர்த்துக்கல் அதிகாரிகள் தலைநகர் லிஸ்பனில் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் அங்கிருந்து அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணிக்கு மும்பை கொண்டுவரப்பட்டார்கள். இதன் காரணமாக லிஸ்பனிலிருந்து டில்லி வரை உள்ள எல்லா விமான நிலையங்களிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மும்பையிலிருந்து நேற்றுப்பிற்பகல் அவர்கள் டில்லி கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மீது தற்போது சி.பி.ஐ.யின் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் - கார்த்திகை 2005

**வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு**

யா/வ.கி/1382 திரு. நற்குணம் குணபாலசிங்கம்
யா/வ.கி/1392 திரு. துரைராஜா சகுந்தலைராஜா
யா/வ.கி/1394 திரு. வேலுப்பிள்ளை சௌந்தரராசா
யா/வ.கி/1395 திரு. தங்கராசா உதயகுமார்
யா/வ.கி/1397 திரு. சிபாலசிங்கம் பாலமனோகரன்
யா/வ.கி/1406 செல்வன். சின்னப்பு சிறிஸ்கந்தராசா
யா/வ.கி/1410 திருமதி நிர்மலாதேவி இரத்தினம் ஜெயசீலன்
யா/வ.கி/1419 திருமதி. ஜீவமனோகரி செல்வகுமார்
யா/வ.கி/1422 திரு. நாகலிங்கம் சந்திரசேகரம்
யா/வ.கி/1435 திரு. [illegible] சந்திரலிங்கம்
யா/வ.கி/1439 திரு. [illegible]ம்பலம் சபாரத்தினம்
யா/வ.கி/1442 திருமதி [illegible] செபரத்தினம் யேசுராசா
யா/வ.கி/1444 திரு. [illegible]ப்பிள்ளை நாகலிங்கம்

**யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/யா/6601 திரு. அருளப்பு யோசேப் எட்வேட்

**கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு**

யா/கோ/997 திருமதி. செல்லத்தங்கம் மார்க்கண்டு
யா/கோ/2707 திரு. இளையவன் இராசையா
யா/கோ/4275 திரு. சின்னத்தம்பி சோமசுந்தரம்
யா/கோ/8069 திருமதி. வசந்தாதேவி இரவீந்திரன்

**தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு**

யா/தெ/1884 திருமதி. மலர் திருஞானரத்தினம்
யா/தெ/3989 திருமதி. டோமினிக்கா முடியப்பு
யா/தெ/4223 திரு. வெள்ளிமயில் வெற்றிவேல்
யா/தெ/4269 திருமதி. மனோன்மணி செல்வநாயகம்
யா/தெ/5308 திருமதி. பிலோமினா பாக்கியநாதர்
யா/தெ/6054 திரு. சின்னத்துரை சிவனேசன்
யா/தெ/6518 திரு. கந்தையா சூரியகுமார்

**சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு**

யா/ச/5370 திரு. பொன்னையா கனகலிங்கம்

**சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு**

யா/சா/ 8007 திருமதி. இராசமணி நாகமுத்து

(முற்றும்)



# தொடர்ந்தது இந்தியாவின் ஆதிக்கம் பரோடா போட்டியிலும் இலகு வெற்றி

இந்தியா- சிறிலங்கா அணிகளுக்கு இடையில் பரோடாவில் நடைபெற்ற இறுதி ஒருநாள் போட்டியிலும் இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்றது.

இவ் வெற்றி மூலம் ஏழு போட்டிகள் கொண்ட வீடியோகான் ஒருநாள் போட்டித் தொடரை 6-1 என்ற ரீதியில் கைப்பற்றியது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிலங்கா அணித் தலைவர் அத்தப்பத்து துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தார். நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 244ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆனல்ட் 68 ஓட்டங்களையும், அத்தப்பத்து 59 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் பதான், ஆர்.பி சிங் தலா மூன்று விக்கெட்டுகளையும் அகக்கர் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இந்தியா 39.3 ஓவர் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டெண்டுல்கர் 39, சேவாக் 35, பதான் 35, டோனி 80 ஓட்டங்களையும் ராவிட் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சொய்சா இரண்டு விக்கெட்டுக்களையும், லொக்கு கெட்டிகே, உபுல் சந்தன, பெர்னாண்டோ தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பதானும், போட்டித் தொடர் நாயகனாக இந்திய அணியின் விக்கெட் காப்பாளருமான மகேந்திரா டோனியும் தெரிவாகினர்.

விளையாட்டு



# சிறிலங்காவுக்கு எதிரான டெஸ்ட் அணியில் இடம்பிடிப்பேன்



கங்குலி

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டி அணியில் இடம் பிடிப்பேன் என்று கங்குலி நம் பிக்கை தெரி வித்துள்ளார்.

துலீப் கோப்பை கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் கிழக்கு- மேற்கு மண்டல அணிகள் மோது கின்றன இந்தப் போட்டி அகம தாபாத்தில் நேற்று( சனிக்கிழமை) தொடங்கியது.

இந்த நிலையில் கிழக்கு மண்டல அணியின் தலைவரான கங்குலி அகமதாபாத்தில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது;

நான் நல்ல உடல் தகுதியுடன் உள்ளேன். இலங்கைக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இந்திய அணி சிறப்பாக ஆடுவது மகிழ்ச்சி அளிக்கிறது.உள்ளூர் போட்டியில் தலைவராக இருப்பதற்கும் சர்வதேச போட்டியில் தலைவராக இருப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எதிர்பார்ப்பும், நெருக்கடியிலும் வித்தியாசம் உண்டு இவ்வாறு கங்குலி கூறியுள்ளார்.

சிம்பாப்வே பயணத்தில் பயிற்சியாளர் சப்பலுடன் பகிரங்கமாக மோதிய கங்குலி, காயம் காரணமாக இலங்கைக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டியில் சேர்க்கப்படவில்லை. அதன் பின் அவர் சலஞ்சர் போட்டியில் சதம் அடித்து அணியில் இடம் பிடிக்க முயற்சித்தும் முடியாமல் போனது. ஒரு நாள் தொடர் முழுவதும் ஓரங்கட்டப்பட்ட கங்குலி டெஸ்ட் போட்டியில் இடம்பிடிக்க பகீரத முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார் அவருக்கு இடம் கிடைக்குமா?என்பது கேள்விக்குறிதான்.



பிரேசிலின் அரைஸ் நகரில் நடைபெற்ற கால்பந்து போட்டி ஒன்றில் ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த முன்னாள் பிரபல வீரர் மரடோனா கலந்து கொண்டு விளையாடிய காட்சி.

# முல்டான் டெஸ்ட் போட்டி நெருக்கடியில் பாகிஸ்தான்



முல்டானில் நேற்று ஆரம்பமான இங் கிலாந்து- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி சற்று தடுமாற்றத்தை சந்தித்துள்ளது. நாணயச்சுழச்சியில் வெற்றி பெற்ற பாக் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.

முதல் நாளான நேற்று மதிய உணவு வரை ஒரு விக்கெட்டை இழந்து 103 ஓட்டங் களை பெற்றிருந்த பாகிஸ்தான் நேற்றைய ஆட்டநேர முடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் சல்மான் பட் 74, மலிக் 39,யூனிஸ்கான் 39, முகமட் யூசும் ஐந்து, அக்மல் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தனர். ஆட்டமிழக்காது இன்சமாம் 41 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

பந்து வீச்சில் பிளின்டொப் ஹார்மிசன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



# பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்; மைக்கல் வோன் விளையாடுவது சந்தேகம்



முழங்காலில் காயத்துக்குள்ளாகியிருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக் கல் வோன் பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் ஆடும் வாய்ப்பு குறைவாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது போட்டியில் விளையாடும் வாய்ப்பு கிடைக்காது விட்டால் இந்தத் தொடரில் அவர் பங்குபற்ற முடியாது விடலாம். எனினும் ஏனைய வீரர்கள் ஆடும்போது உடை மாற்றும் அறையிலிருந்து தனியாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று குறிப்பிட்ட வோன், அணி நல்ல நிலைக்கு வந்து கொண் டிருக்கும்போது இவ்வாறு நடந்தமை ஏமாற்ற மாகும் என்றார்.

# சிம்பாப்வே கிரிக்கெட் சபையில் மாற்றம் வேண்டும் இல்லையேல் கிரிக்கெட் முற்றிலும் மறைந்துவிடும்




தைபு

சிம்பாப்வே கிரிக்கெட் சபையில் மாற்றங்களை ஏற்படுத்தாவிடில் அங்கு கிரிக்கெட் விளையாட்டு முற்றிலும் மறைந்துவிடும் என அணித்தலைவர் டட்டண்டா தைபு எச்சரிக்கை விடுத் துள்ளார். சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்கள் சிலரும் கவுண்டி வீரர்களும் கிரிக் கெட் சபைத்தலைவர் பீற்றர் சிங்கோக்காவும் முகாமையாளர் ஓசியபாஸ் பியுட்டு பதவிவிலக வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தைபு மேலும் தெரிவிக்கும் போது; தற்போது கிரிக்கெட் சபையில் நடவடிக்கை [illegible] தவறான வழியில் செல்வதாகக் குறிப்பிட்ட அவர் 2004ஆம் ஆண்டு வீ[illegible] பரீக் பதவி விலகியதைபடுத்து இந்த பிரச்சினை தோன் றியதாகவும் சபையின் கொள்கையே இதற்குக் காரணம் என்றும் தெரி வித்துள்ளார்.

வெள்ளையர்களான வீரர்கள் மீது சபை எடுத்த முடிவும் முன்னாள் பயிற்றுநர் பில் சிமன்ஸ் நீக்கப்பட்டமையுடன் இந்த விளைவு ஏற்பட்டது எனத் தெரிவித்துள்ள அவர், அதன்மூலம் பிரச்சினை சுமுக நிலைக்கு வந்து விடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிம்பாப்வே அணி 2005இல் போட்டியிட்ட எட்டு டெஸ்ட்போட்டிகளில் ஏழு போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளமையும், 12 ஒருநாள் போட்டிகளில் பத்தில் தோல்வியடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



லொஸ் ஏஞ்சல்ஸ் டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் உலகின் முதல்நிலை வீராங்கனை அமெரிக்காவின் லிண்ட்சே டேவன் போர்ட் தோற்றார். அவரை வீழ்த்திய ரஷ்ய வீராங்கனை மரிய சரபோவா வெற்றி மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

# ஒரு பருவ காலத்தில் 48 கோடி சம்பாதித்த பெடரர்



டென்னிஸ் விளையாட்டில், ஒரே பருவ காலத்தில் ரூபா 48 கோடி வென்ற ரோஜர் பெடரர், மேலும் பலகோடியை குறிவைத்து களம் இறங்குகிறார்.

டென்னிஸ் வீரர்கள் தர வரிசையில் உலகின் முதல்நிலை வீரராக திகழ்பவர் ரோஜர் பெடரர். டென்னிஸ் போட்டிகளில் வெற்றிகளை வரிசையாகக் குவித்து, ஒரே பருவ காலத்தில் ரூபா 48 கோடிக்கு மேல் சம்பாதித்த உலக டென்னிஸ் வீரர்கள் இரண்டே இரண்டு பேர்தான். ஒருவர் பீட் சாம்ப்ராஸ் இன்னொருவர் ரோஜர் பெடரர்.

இப்போது இன்னொரு பேராசையும் இவரைக் கவ்விக் கொண்டுள்ளது. அதாவது மொத்தப் பரிசுத் தொகை ஏறத்தாழ ரூபா 42 கோடி கொண்ட மாஸ்டர்ஸ் கிண்ணப் போட்டி, இன்று சீனப் பெருநகரமான ஷங்காயில் தொடங்குகிறது. அதில் கலந்து கொள்கிறார் பெடரர்



சிந்தனைக்கு

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 13.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஆச்சரியம் எதுவுமில்லை!

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வென்றால் என்ன? மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் என்ன?, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் முன்னேற்றம் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்பது தமிழ் மக்களுக்குத் தெரிந்ததொன்றே. இதனைத் தமிழ் மக்களுக்கு எவரும் தெளிவுபடுத்தவேண்டும் என்பதல்ல.

ஆனால், சில அரசியல்வாதிகளும், சில ஆய்வாளர்களும் அண்மையில் ஐ.தே கட்சியைச் சேர்ந்த நவீன் திஸாநாயக்கவும், மிலிந்தமொறகொடவும் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் அதாவது கருணா விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறியமைக்கும், விடுதலைப்புலிகளின் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமை போன்ற விடயங்களும் ரணில் விக்கிரமசிங்க குறித்த தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்துபவையாகவுள்ளன எனக் கருதுகின்றனர்.

அடிப்படையில் இவ் அபிப்பிராயம் அர்த்தமற்றதாகும். ஏனெனில் ஐ.தே.கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் பற்றித் தமிழ் மக்களுக்கு நன்கே தெரியும். இவ்விரு கட்சிகளையும் நம்பித் தமிழ் மக்கள் அரசியல் தீர்மானங்கள் எதையும் மேற்கொள்வதும் இல்லை, மேற்கொள்ளப்போவதுமில்லை.

ஆகையினால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கருணாவைப் பிளவுபடுத்தியதான தகவல்கள், புலிகளின் கப்பல்களை மூழ்கடித்தமைக்கு உரிமை கோருதல் போன்றவை தமிழ் மக்களுக்கு அதிர்ச்சி தரும் தகவல்கள் அல்ல. ஏனெனில் சிங்கள அரசியல் கட்சிகள் சமாதான முயற்சிகளுக்கு என்றுமே விசுவாசமாக இருந்ததில்லை.

அத்தோடு யுத்தநிறுத்த காலகட்டத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி அது செல்லவில்லை என்பதை வெளிப்படுத்தியதாக இருந்தது. இந்நிலையில் தமிழ் மக்கள் சிறிலங்கா ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளில் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்?

ஆகையினால், நவீன் திஸாநாயக்கவும், மிலிந்த மொறகொடவும் வெளியிட்ட தகவல்கள் தமிழ் மக்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களின் முன்னுள்ள கேள்வி இவ்விடயத்தை ஏன் தற்பொழுது ஐ.தே.கட்சியினர் வெளியிட்டார்கள் என்பதே.

இதற்கு இரண்டு காரணங்கள் இருத்தல் வேண்டும். ஒன்று, இவ்வாறு கூறுவதன் மூலம் சிங்கள வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுதல் முடியும் என்பது. அவ்வாறு இல்லாதுவிட்டால் அதாவது இரண்டாவது ரணில் விக்கிரமசிங்கவை சனாதிபதி தேர்தலில் தோற்கடிக்க மேற்கொண்ட சதி முயற்சியாக இருத்தல் வேண்டும்.

சற்றுவிரிவாகக் கூறின் தமிழ் மக்கள் தமக்கு வாக்களிக்கக் கூடிய வாக்குகளைவிட தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை வெளியிடுவதன் மூலம் சிங்கள வாக்காளர்களிடம் இருந்து அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை. இம்முடிவிற்கு வருவதற்கு வேறுசில காரணிகளும் இருந்திருத்தல் கூடும். குறிப்பாக விடுதலைப்புலிகள் தேர்தலில் எவரையும் ஆதரிப்பதில்லை என்ற தீர்மானமும், தமிழ் மக்கள் மத்தியில் வாக்களிப்பில் கலந்துகொள்ள வேண்டியதில்லை என்ற ரீதியில் வளர்ந்துவரும் அபிப்பிராயங்களும். அதாவது தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற கருத்தும் இம்முடிவிற்குக் காரணமாகும்.

இதேவேளை, நவீன் திஸாநாயக்கவும், மிலிந்தமொறகொடவும் பேசியவை ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராக மேற்கொண்ட சதி முயற்சிகளெனக் கொள்வதாயின் அதற்குப் போதிய ஆதாரங்களோ சாதகமான சூழ்நிலையோ இருப்பதாக இல்லை.

அதாவது நவீன் மீதும், மொறகொட மீதும் ரணில் விக்கிரமசிங்க சீற்றமோ, வெறுப்போ கொண்டதாக இல்லை. மாறாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடனான விவாதத்திற்கு ஏற்பாட்டாளராக மிலிந்த மொறகொடவையே ரணில் விக்கிரமசிங்க நியமனம் செய்துள்ளார்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க நவீன் திஸாநாயக்கவினதோ, மிலிந்த மொறகொடவினதோ பேச்சினால் மனவருத்தம் ஏதும் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆகையினால் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனேயே இந்தப் பேச்சு வெளிவந்திருத்தல் வேண்டும்.

இதனைப் பார்க்கையில் மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு சிங்கள வாக்காளர்களை மட்டும் குறிப்பாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளாரோ அதேபோன்று ரணில் விக்கிரமசிங்கவும் மேற்கொண்டுள்ளதாகவே எண்ண வைத்துள்ளது. வேறுவிதமாகக் கூறின் மீண்டும் மீண்டும் தாம் சிங்களவரின் தலைவர்களே என்பதை அவர்கள் நிரூபிக்க முற்பட்டுள்ளதாகவே எண்ண வைக்கி...

# ஓயாத அலைகள் மூன்றில் இராணுவம் ஆயுதங்களைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தது

### - மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் ஓயாத அலை-03 இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது தமது பெறுமதியான ஆயுதளபாடங்களையெல்லாம் கைவிட்டு இராணுவத்தினர் ஓட்டம் பிடித்தனர் என சிறிலங்கா இராணுவத்தில் முதல்தர அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவித்த மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க நவம்பர் முதலாம் திகதி 1999ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியபோது நடைபெற்றவை தனக்கு ஞாபகமிருப்பதாகத் தெரிவித்திருப்பதோடு ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் அனைத்தையும் கைவிட்டு இராணுவத்தினர் மூன்று நாட்களுக்குள் முழுமையாக ஓட்டம் பிடித்தனர் என்றும், இதன்போது தமது பெறுமதியான ஆயுத தளபாடங்களைக் கூட அப்படியே விட்டு விட்டே ஓடினர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு போராட்ட காலத்தில் 45,000 படையினர் படைகளை ,விட்டுத் தப்பி ஓடியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தளங்கள், கட்டளை மையங்கள் உள்ளிட்ட அனைத்திலும் பாரிய ஆயுத தளபாடங்கள், நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள், ராடர்கள் மற்றும் யுத்த டாங்கிகள் உள்ளிட்ட வாகனங்களைக்கூட கைவிட்டு சண்டை தொடங்கியதும் இராணுவத்தினர் பின்வாங்கி ஓடினர் என்பதும் மேற்படி ஜெயசுக்குறு ஆயுத தளபாடக் கையிருப்பு மற்றும் ஆனையிறவு தளபாடக் கையிருப்பு என்பன சிறிலங்கா இராணுவத்தின் ஒட்டு மொத்த ஆயுத வலுவில் 40 விழுக்காடு தொகையைக் கொண்டிருந்தவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# வவுணதீவில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு சாளம்பங்கேணிப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்காப் பொலிசாரும். விசேட அதிரடிப்படையினரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் மக்கள் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. காலை ஆறுமணியளவில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போதுகூடுதலான சிறிலங்காப் பொலிசாரும், படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் வவுணதீவுப் பாலமூடாக படுவான்கரைப் பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபட்டிருக்கும் பேருந்து போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.இதனால் அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அன்றாட கடமைகளுக்கு நகர்புறங்களுக்குசெல்லும் பொது மக்கள் எனப்பலரும் பாதிக்கப்பட்டனர்.

படையினர் சாளம்பங் கேணிப் பகுதியில் வாழும் மக்களின் வீடுகளுக்குள்சென்று சோதனையிட்டுள்ளனர்.இதனால் மக்கள் பெரும் அச்சமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முதலாம் உலகப்போரில் உயிர் நீத்தோருக்கு பெல்ஜியம் ஈழத்தமிழர்கள் அஞ்சலி

முதலாம் உலகப்போரில் உயிர் நீத்த படை வீர்களுக்கு பெல்ஜியம் வாழ் ஈழத்தமிழர்கள் முதன்முறையாக கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

ஐரோப்பாவின் போர்க்களம் என வர்ணிக்கப்படும் நாடாகிய பெல்ஜியத்தில் யுத்தம் நிகழ்ந்த நகரமாகிய ஈபரில் முதலாம் உலகப் போர் காலமாகிய 1914-1918 காலப்பகுதியில், ஐக்கிய இராச்சியத்தையும் அதனைச் சார்ந்த நாட்டு படையணிகளுமாக 250,000இற்கும் மேற்பட்ட படையினர் ஈபரிலும்அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் உயிரிழந்தனர்.

1917 ஆம் ஆண்டு யூலைக்குப் பின்பே அவர்களை நினைவுகூர்ந்து நினைவு இல்லங்கள் அமைக்கப்பட்டன.155-இற்கும் மேற்பட்ட நினைவு இல்லங்களில் அடையாளம் காணப்பட்ட, அடையாளம் காணப்படாத பல்லாயிரக் கணக் கான படையினரின் வித்துடல்கள் விதைக்கப்பட்டு இன்றுவரை பொது நலவாய நாடுகள் அமைப்பால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

முதலாம் உலகப் போரில் உயிரிழந்து அடையாளம் காணப்பட்ட 54,896 படையினரது பெயர்களைத் தாங்கி மீனன் கேற் எனும் ஞாபகார்த்த வளைவானது 1928ஆம் ஆண்டு யூலை மாதம் கட்டப்பட்டு, அன்று தொடக்கம் நாளாந்தம் மாலையெட்டு மணிக்குவிசேட அணி வகுப்பு மரியாதைகளுடன் கூடிய அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது. வருடம்தோறும் 11ஆம் மாதம் 11 ஆம் திகதி11 மணிக்கு லாஸ்ற் போஸ்ற் எனும்விசேட அஞ்சலி நிகழ்வும் மிகப் பிரமாண்டமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நினைவு கூரப்பட்டது.இதற்கு பல்வேறுபட்ட நாடுகளிலும் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் வருகை தந்திருந்தனர்.இந்த சிறப்பு நிகழ்வில் பெல்ஜியம் வாழ் ஈழத்தமிழர்களும் முதன் முறையாகயாக் கலந்து தமது அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

# தேர்தல் கண்காணிப்பாளருக்கு விசேட பயிற்சிநெறி

(கொழும்பு)

வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான விசேட பயிற்சிநெறி ஒன்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இப் பயிற்சி நெறியின் பின்னர் கண்காணிப்பாளர் கள்கிழக்கு உட்பட நாட்டின் பலபாகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக நூற்றுக்கும் அதிகமான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பப்ரல்அமைப்பு தீர்மானித்துள்ளது.

இதற்காக சுமார் 35 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கண்காணிப்பாளர்கள் இலங்கை வந்துள்ளனர்.

# பதிவுகளை மேற்கொள்ளவும்

யாழப்பாணத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் விபரங்களை சேகரிக்கும்செயற்பாட்டில் தமிழ்தேசிய கூட்டமைப்புபாராளுமன்ற உறுப்பினர் கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் முதற்கட்டமான பதிவுகள் நேற்றுக் காலை 9.00- 3.00வரைநடைபெற்றது. தொடர்ந்து இன்று காலையும் 9.00- 1.00மணி வரை யாழப்பாண கூட்டுறவுச்சங்கக்கேட்போர் கூடத்தில் (மூன்றாம் மாடி) நடைபெறும் எனவே பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்கள் அனைவரையும் அனைத்து ஆவணங்களுடனும் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளும்படி காணாமற்போனோர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (28)

# மூதூரில் கடற்றொழிலுக்கு படையினர் கெடுபிடி

(திருகோணமலை)

மூதூர்க்கிழக்குப் பிரதேச மீனவர்கள் மாலை ஆறு மணிக்குப்பின்னர் கடலில் மீன்பிடி வள்ளங்களை இறக்கக் கூடாது எனப் படையினர் தடைவிதித்துள்ளனர் என்று விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

கடலில் தங்களின் உயர் பாதுகாப்பு வலயத்தைத்தாண்டி இம் மீனவர்கள் தொழிலுக்கு செல்லவேண்டியிருப்பதால்தான் இத்தடை விதிக்கப்பட்டிருப்பதாகப் படையினர் அறிவித்துள்ளனர். இதன் காரணமாக மூதூர் கிழக்கு மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடித்தலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.


எமது பிரதேசத்தில் 150 உழவு இயந்திரங்கள் உள்ளன. ஆனால் குறிப்பிட்ட அளவு வீதம் மசல் மட்டுமே அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கட்டைப்பறிச்சான்இராணுவ முகாம் சோதனைச்சாவடி ஊடாக எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகளை எவ்வாறாவது சீர்குலைக்க வைக்க வேண்டும் என்ற நோக்குடன்தான் படையினர் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தடை மற்றும் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர் என்றுமவர் குறிப்பிட்டார். (25)

# அமெ. இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் 28ஆம் ஆண்டு விழா நிகழ்வு

(வோஷிங்டன்)

அமெரிக்க இலங்கைத் தமிழ்ச் சங்கம் தனது 28ஆவது ஆண்டு நிறைவு விழாவை கடந்த நான்காம், ஐந்தாம் திகதிகளில் வெகுசிறப்பாகக் கொண்டாடியது.

அமெரிக்காவில் ஈழத் தமிழர்கள் அதிகம் வாழும்



நியூஜேர்சி மாநிலத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்பு விழாவில் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

அமெரிக்க காங்கிரஸ் அவையின் உறுப்பினரும் அண்மையில் தமிழீழப் பகுதிக்கு வந்து ஆழிப்பேரலை சேதங்களைப் பார்வையிட்டதுடன், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துவிட்டு சென்றவருமான டானி டேவிஸ், இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

ஜேர்மனியைச் சேர்ந்த அறிஞரும், தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் ஆர்வமுடையவருமான பேராசியர் ஜோன் நீல்சன் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு தற்போதைய அரசியல் நிலவரங்களை விளக்கினார்.

வைத்திய கலாநிதி ராஜன் சிறீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பான கேள்வி- பதில் நிகழ்வில் டானி டேவிஸ், பேராசிரியர் ஜோன் நீல்சன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மக்களின் கேள்விகளுக்கு விளக்கமாகப் பதிலளித்தனர்.

இந்த விழாவின் முக்கிய நிகழ்வாக, தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இலங்கைத் தமிழ்ச் சங்கத்திற்காக வழங்கிய வாழ்த்துரை பெரும் திரையில் காண்பிக்கப்பட்டது. இந்த அரை மணி நேர உரையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான தற்போதைய உள்நாட்டு, வெளிநாட்டு நிலவரங்களில் புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டினை தமிழ்ச்செல்வன் மிகவும் தெளிவாக விளக்கினார்.

ஆழிப்பேரலை அழிவின் நிவாரண முயற்சிகளுக்கு அமெரிக்கத் தொண்டு நிறுவனங்களும், அமெரிக்கத் தமிழ் அமைப்புக்களும் ஆற்றிய பெருதவிக்கு நன்றி தெரிவித்ததுடன், அமெரிக்க நாட்டில் முன்னெடுக்கப் படக்கூடிய அரசியல் வேலைத் திட்டங்கள் பற்றியும் அவர் விளக்கினார். அவருடைய உரையை அங்கு கூடியிருந்தோர் மிகவும் உன்னிப்பாகச் செவிமடுத்தனர்.

இந்த விழாவில் தேசியத் தலைவர் அவர்கள் பற்றி உருவாக்கப்பட்டுள்ள "விடுதலைப் பேரொளி" என்ற நூல் வெளியிடப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றை எடுத்து விளக்கி விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய "போரும் சமாதான மும்" என்ற நூலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

# கரையொதுங்கிய சடலம் இனம்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பலாலி கடற்பரப்பில் கரையொதுங்கிய மீனவரது சடலம் இனங்காணப்பட்டது.

கடந்த ஒன்பதாம் திகதி பலாலி கடற்பரப்பில் கரை ஒதுங்கிய சடலம் சிலாபத்தையைச் சேர்ந்த யூட் நிரோஜன் (வயது - 48) என்பவருடையது என அவரது உறவினரால் அடையாளம் காணப்பட்டது.

சிலாபத்திலிருந்து மன்னார் கடற்பரப்பில் தொழிலுக்கு கடந்த ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்றவர் வீடு திரும்பாததையடுத்து பலாலி பொலிசாரால் சடலம் ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட தகவல் தெரிந்ததையடுத்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் வைத்து சடலம் இனங்காணப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினரிடம் கையளிக்கப்படவுள்ளதாக யாழ். வைத்தியசாலையில் இயங்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜேக்கப் தெரிவித்தார். (கீ)

# பிரதம வேட்பாளர்களின் நேரடி விவாதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

சனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ விற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையில் சனாதிபதித்தேர்தலை முன்னிட்டு நடைபெறவிருந்த நேரடி விவாதத்தை கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் இருதரப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையையடுத்து எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உத்தேச விவாதத்தை நடத்துவதற்கு இடம்,பிரதிநிதிகள்,பங்களிப்பு, ,காலம், விவாதத்தின் உள்ளடக்கம், ஊடகங்கள், அதனை ஒலிபரப்புவதற்கான அனுமதிஎன்பவைகுறித்து இருதரப்புப் பிரதிநிதிகளுக்கு மிடையில்ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

எனினும் பல்வேறு விடயங்களில் இணக்கப்பாட்டை அடைவதற்கும் உறுதியான தீர்மானத்தை எட்டுவதற்கும் தேர்தல் சட்டதிட்டத்தின்படி போதுமான கால அவகாசமின்மைஉள்ளதாக இரு தரப்பு பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர். பிரதான இரண்டு சனாதிபதி வேட்பாளர்களுக்கு மிடையில் நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேரடி விவாதம் கைவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியை பிரதிநிதித்துவப் படுத்திய மிலிந்தமொறகொட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்திய டலஸ் அழகப்ப ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சனாதிபதித்தேர்தலை புறக்கணிக்குமாறு அம்பாறையில் "சீறும்படை" துண்டுப்பிரசுரம்

(அம்பாறை)

சனாதிபதித்தேர்தலை புறக்கணிக்குமாறு சீறும்படை என்ற பெயரில் துண்டுப் பிரசுரம் ஒன்று அம்பாறை மாவட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அன்பான தமிழ் மக்களுக்கோர் அறிவித்தலும், எச்சரிக்கையும் என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்காவின் சனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலுக்கு தமிழர் நாம் ஏன் சிந்திக்க வேண்டும். சிங்களவர் சிந்திக்கட்டும். இதை விட்டு விலகுவோம். எல்லோரும் தேர்தலின் போது வாக்குறுதிகளை அள்ளி வீசுவர் ஆனால், இந்த சனாதிபதித் தேர்தலில் இரண்டு பெரும் இனவாதக் கட்சிகளுக்குள் இருக்கும் முக்கிய உறுப்பினர்களே துரோகத்தனத்துடனும், இனத்துவேசத்துடனும் மேடைகளில் இனத்துவேசத்தையே காட்டுகின்றனர். இவர்களையும் இவர்களின் கடந்தகால ஒப்பந்தங்களும் வரலாறுகளும் எம் கண் முன்னே தெட்டத்தெளிவாகத் தெரியும் போதுநாம்ஏன்வாக்களிக்க வேண்டும்?

வடக்குக் கிழக்கு எங்கும் புத்தர் சிலை வைப்பதற்கும்,சிங்களமயமாக்கு வதற்கும் சுனாமியைப் பயன்படுத்திய ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற இனத்துவேசம் பிடித்த கட்சிகள் மகிந்தவுடனும், ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளோடு அமெரிக்கப் படைகளைக் கொண்டு சண்டை பிடிக்கலாம். சிங்களப் படைகள் போரிடத் தேவையில்லை. எனக் கூறிக் கொண்டு இனத்துவேசமும், போர் வெறியும் கொண்டு பிரசாரம் செய்வதை பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் தேர்தலைப் பற்றி தமிழன் சிந்திப்பான் என்றால் அவனைப் போன்ற ஏமாளி எவனும் இல்லை. எனவே அன்பான எம் இனிய தமிழ் மக்களே தேர்தலைப் பகிஷ்கரிப்போம்.

தமிழன் தன்மானம் உள்ளவன் என்பதை உலகுக்குக் காட்டுவோம். அத்தோடு தம் சுய இலாபத்திற்காக இனவாதக் கட்சியின் பிரசுரம் ஒட்டுவதோ, வாக்களிப்பதோ தேசத் துரோகிகளுக்கு இடம் கொடுப்பதோ மன்னிக்க முடியாத குற்றமும், எம் தேசத்திற்கு ஏற்படுத்தும் மிகப் பெரிய ஈனச் செயல் என்பதையும் சம்பந்தப் பட்டவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மின்சார....

மின்சார வேலியில் சிக்கி அந்த இடத் திலேயே பலியானார்.

தங்காலையைச் சேர்ந்தவரான இவரது மரணம் குறித்த விசாரணை அறிக்கையை எதிர்வரும் 23 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

## வவுனியா....

சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா சிறிலங்காப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.சி அபயசிங்க பண்டார மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

## மாவீரர் நாளன்று....

தினத்தன்று பிறந்த குழந்தை களுக்கு சிறப்புத் திட்டமாக அவர் களது பெயரில் "தளிர்" சிறுவர் சேமிப்புக் கணக்கு கிராமிய வங்கியில் ஆரம்பிக்கப்பட்டு வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (சோ)

## தமிழீழ...

நிகழ்வின் ஆரம்பத்தில் முதன் மைச் சுடரினை வடபோர் முனை கட்டளைப் பணியகத்தின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ரமேஸ் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை லெப்.கேணல் ராஜன் கல்விப் பொறுப்பாளர் இ.கீதன் ஏற்றி வைத்தார்.

மாவீரர்களின் பொது உருவப் படத்திற்கான ஈகச் சுடரினை லெப். கேணல் ராஜன், கல்விப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர். மலர் மாலையினை சோதியா படையணிப் போராளி செல்வி அணிவித்தார்.

தொடர்ந்து படையணிப் போராளிகளுக்கிடையிலான கலையிலக்கியப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இக் கலை இலக்கியப் போட்டிகள் தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

## லெப்....

நிலவிய சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும், பொறுப்புடன் செயற்பட்டவரும் 1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் துணையாக துணைப்படையை மக்கள் மத்தியில் உருவாக்கி அத்துணைப் படையணிகளின் துணையோடு எதிரி மீது பல தாக்குதல்களையும் நடாத்தி அப்பகுதி மக்கள் மத்தியில் நீங்காது இடம் பிடித்திருந்தவருமான லெப்.கேணல் அன்பு அவர்களின் நினைவு நாளினை அப் பகுதி மக்கள் மிக உணர்வு பூர்வமாக அனுஷ்டித்தனர்.

நேற்று பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்வின் பொதுச் சுடரினை வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஏற்றினார். அடுத்து லெப்கேணல் அன்புவின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை அமைப்பிலைச் சேர்ந்த கண்ணகை அம்மா ஏற்றி வைக்க தொடர்ந்து தவளை நடவடிக்கையில் வீரச்சாவடைந்த குமுழமுனைப் பகுதி மாவீரரான கப்டன் செந்தூரனின் திருவுருவப் படத்திற்கு அம்மாவீரரின் தாயார் ஈகச்சுடர் ஏற்றினார். அடுத்து இதே சமரில் வீரச்சாவடைந்த 2 ஆம் லெப்.மாதங்கியின் திருவுருவப் படத்திற்கு குமுழமுனை வலயப் பொறுப்பாளர் ஈகச்சுடரேற்றினார். தொடர்ந்து லெப். கேணல் அன்புவின் திருவுருவப் படத்திற்கு முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், முல்லை செயலணிக் குழுத் தலைவர் கிருஸ்ணபிள்ளை, முல்லைத் தீவு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சரவணன் ஆகியோர் ஈகச்சுடர்ஏற்றினார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் சிறப்புரைகளை பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், கிளி நொச்சி மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன் ஆகியோர் நிகழ்த்த நினைவுரைகளை குமுழமுனை மகாவித்தியாலய ஆசிரியர் உதயசீலன் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த நளினரூபன் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், பிரதேசப் பொறுப்பாளர் தயா மற்றும் போராளிகள் பொறுப்பாளர்கள் பொது மக்கள் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (ச.20)

## சிறிலங்கா....

ஏற்றுக்கொள்ளும்? சிறிலங்கா அரசாங்கம் தமது வாக்குறுதிகளை மீறுவதன் மூலம் சர்வதேச சமூகம் தமக்கு ஆதரவாக மாறும் என்று புலிகள் நினைக்கலாம். அது தவறு. அதேபோல் இந்தத் தேர்தலைத் தமிழ் மக்களைப் புறக்கணிக்கச் செய்வதும் அதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதும் மிக மோசமான தவறாகிவிடும் என்று எழுதியுள்ளார்.

கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக சர்வதேச சமூகத்தில் குறிப்பாக அமெரிக்க பாராளுமன்றத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் அழுத்தத்தினூடாக உருவாக்கப்பட்ட ஒரு குழுமம் உள்ளது. அந்தக் குழுமத்தில் சிறிலங்காவின் ஆய்வு வல்லுநர்கள் புலிகளுக்கு எதிராக கருத்துக்களைச் சொல்வது வழமையானது.

அண்மையில் ஜயந்த தனபாலவும், பேர்னாட் குணதிலக்கவும் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். "தமிழ் விடுதலைப் புலிகள் மோசமான பயங்கரவாதிகள். சர்வதேச சமூகம் அவர்களிடம் மென்மையான போக்கைக் கடைபிடிக்கிறது. அது கூடாது" என்று கூறி ஒரு அச்சத்தை ஏற்படுத்துகிறார்கள்.

விடுதலைப்புலிகளின் பக்கம் சர்வதேச சமூகம் சாய்ந்துவிடுமோ, விடுதலைப்புலிகளின் பரப்புரைப் பணிகளில் வெற்றி பெற்று விட்டார்களோ என்ற அச்சத்தின் அடிப்படையில் அவர்கள் இத்தகைய கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

தமிழ் தரப்பைப் பலவீனப்படுத்தி ஒரு இடைக்காலத் தீர்வை நோக்கி கொண்டு போவதற்காக சர்வதேச சமூகம் முன்னெடுக்கும் முயற்சிகளை கூட - இந்த சிறிய அளவு அதிகாரத்தைக் கூட கொடுக்க மனமில்லாத சிங்களத் தரப்பு மீது என்ன அழுத்தத்தை சர்வதேச சமூகம் கொடுக்கப்போகிறது? என்பதைத்தான் இந்தத் தேர்தலின் முடிவு சொல்லப் போகிறது.

நாம் தமிழர் தரப்பு. சர்வதேச சமூகத்திற்கு எதிராக நடக்கவில்லை. நாங்கள் சனநாயகத்துக்கு விரோதமாக நடக்கவில்லை. தேர்தலைப் புறக்கணிக்குமாறும் கோரவில்லை. நாங்கள் கோருவதெல்லாம் எதற்காக இந்தத் தேர்தல் நடைபெறுகிறது? என்ன முடிவை இந்தத் தேர்தல் உலகத்துக்குக் கொடுக்கப் போகிறது? இந்தத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் என்ன நன்மைகளைப் பெறப் போகிறார்கள்? எந்த நன்மையுமே தமிழர்களுக்கு இந்தத் தேர்தல் மூலம் கிடைக்கப் போவதில்லை என்பது வெளிப்படையானது.

வியட்நாம், கியூபா, ஆச்சே உள்ளிட்ட போராட்டங்களுடன் தொடர்புபட்டு அனுபவங்களைப் பெற்று சிறிலங்காத் தரப்பின் உதவியுடன் தமிழ் மக்கள் மீது அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் செலுத்தியது.

ஆனால், 21ஆம் நூற்றாண்டிலும்கூட சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகளைப்புரிந்து கொள்ள மறுக்கின்ற சிங்களத் தரப்பின் மீது நம்பிக்கை வைத்து இன்னமும் எங்களைப் சர்வதேச சமூகம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது நாம் என்ன என்று சொல்ல? என்றார் பாலகுமாரன்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.